பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 13 செவ்வாய்க்கிழமை 26.01.2021 கதிர் 82

### இது ரகசியம் அல்ல!

'திரிசங்கு சொர்க்கம்' என்ற ஒரு சொல்லாடல் நம் மத்தியில் உண்டு. பல பேருக்கு அதன் அர்த்தம் விளங்குவதில்லை. இரண்டுக்கும் இடையில் மாட்டி, இரு பக்கவாய்ப்புகளையும் இழந்து, அந்தரத்தில் – திண்டாட்டத்தில் – சிக்கியிருக்கும் பக்கம்02 »



# இலங்கையின் மனித உரிமை மீறல் தொடர்பில் பிரிட்டன் மிக அவதானம்

## தூதுவர் சாரா ஹல்டன் 'ருவிட்டர்' செய்தி

கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழந்தவர்களைக் கட்டாயமாக எரிக்கும் நடைமுறை உட்பட இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களில் பிரிட்டன் மிகவும் அவதானமாக உள்ளது என இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் தெரிவித்துள்ளார்.

அவர் ருவிட்டர் செய்தியொன்றை வெளியிட்டு, இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது ☞2

# காலாவதியான சட்டங்களால் இலங்கையில் மக்கள் பாதிப்பு

## பிரதமர் மஹிந்த இப்படித் தெரிவிப்பு



இலங்கையிலுள்ள மக்கள் தொடர்ந்தும் காலாவதியான சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் கட்டளைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். பொது மக்களை இவ்வாறான அழுத்தங்களில் இருந்து விடுவிப்பதே அரசின் பொறுப்பு.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். ☞2

## 59 ஆயிரத்தைத் தாண்டிய கொரோனாத் தொற்றாளர்

### நேற்றும் 737 பேர் அடையாளம்

இலங்கையில் நேற்றும் 737 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ☞2

## மேலும் நால்வர் சாவு கொரோனா காவு 287

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் நால்வர் சாவடைந்துள்ளனர். ☞2

## வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வெளியில் வந்தார் மஹிந்தர்

### 'நீதி இல்லம்' கட்டடத் தொகுதிக்கு அடிக்கல்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடும் சுகவீனமுற்றுள்ளார் எனவும், அவர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளார் எனவும், அவருக்குக் கொரோனா தொற்றியுள்ளது எனவும் மூன்று ☞2

## முன்னுரிமை அடிப்படையில் கொரோனாத் தடுப்பூசி; பட்டியல் இறுதியானது என்கிறார் இராணுவத் தளபதி



இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் பணிகள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், முதல் கட்டமாக கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படவுள்ள முன்னுரிமைப் பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய ☞2

# கிழக்கு முனையத்தை யார் எதிர்த்தாலும் இந்தியாவுக்கு அரசு வழங்கியே தீருமாம்



### இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா கூறுகின்றார்

யார் எதிர்ப்பு வெளியிட்டாலும், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்குக் குத்தகைக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

– இவ்வாறு கிராமிய அபிவிருத்தி மற்றும் ஏனைய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

வத்தளை கெரவலப்பிட்டி ☞2

## வேலணை பிரதேச செயலர் ஒரே நாளில் செட்டிகுளத்துக்கு தூக்கியடிக்கப்பட்டார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாணம் மாவட்டம் வேலணை பிரதேச செயலாளர் நேற்றைய தினம் திடீரென செட்டிகுளத்திற்கு தூக்கி வீசப்பட்டார்.

வேலணைப் பிரதேச செயலாளராக நேற்று வரை திறம்படப் பணியாற்றிய அம்பலவாணர் சோதிநாதன் பொது நிர்வாக ☞2


# சயன்ஸ் அக்கடமி

SCIENCE ACADEMY NALLUR ARIYALAI JAFFNA

நல்லூர் முருகன் ஆலயம் முன்பாக நாவலர் வீதி, அரியாலை

தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற் தர நிறுவனம்

நிகரற்ற சிறப்பான நிர்வாக கட்டமைப்பின் கீழ் யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில் 40 வருடங்களுக்கு மேலான கல்வி பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் சாதனை ஆண்டில் தொடர்கின்றது.

## புதிய கல்வியாண்டு - 2021

வெற்றித்தேர்வு ஆரம்ப பிரிவு
தரம் 1 முதல் தரம் 5 வரை
வாராந்தம் பரீட்சைகளோடு

தமிழ் மொழி மூல வகுப்புகள்
தரம் 6 முதல் O/L வரை

ENGLISH MEDIUM CLASSES
GRADE 6 - O/L

இவற்றுடன் ICT, ENGLISH LITERATURE, சிங்களம் ஆகிய பாடங்களும்

ஆரம்பம் - 28.01.2021 வியாழக்கிழமை காலை 9.00 மணி

இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று சாதனை படையுங்கள்!

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"

077 5388471, 077 3126807, 021 222 9016


## மற்றுமோர் எம்.பிக்கும் கொரோனாத் தொற்று



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (விரமான செய்தி 05ஆம் பக்கத்தில்)

## தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து யோஷிதவுடன் சாணக்கியன் பேச்சு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரங்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து பிரதமர் அலுவலகப் பிரதானியான யோஷித ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
நிலையைத்தான் அப்படிக் கூறுவர்.

தனது பூதவுடலுடன் சொர்க்கம் போக எண்ணினான் திரிசங்கு மன்னன். அவனுக்கு உதவ யாகம் செய்கின்றார் விஸ்வாமித்திரா முனிவர். அவனை அப்படியே சொர்க்கத்துக்கு மேலே அவர் அனுப்ப, இந்திரன் அவனை சொர்க்கத்தில் அனுமதிக்க மறுக்கின்றான். எட்டிக் கீழே தள்ளி விடுகின்றான் இந்திரன். கீழே விழத் தொடங்கினான் திரிசங்கு. கோபம் கொண்ட விஸ்வாமித்திரர் அந்தரத்தில் திரிசங்கை நிறுத்தி, அங்கேயே ஒரு சொர்க்கத்தை அவனுக்காக நிர்மாணிக்கின்றார். இது தான் – இடைவழியில் நிற்கும் பரிதாபம் தான் – திரிசங்கு நிலைமை.

சரி, இனி விடயத்துக்கு வருவோம்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நிர்வாகிகள் அக்கட்சியின் யாப்பு மறுசீரமைப்புக்கு அமைய நியமிக்கப்பட்டுள்ளனர். செயற்குழுவும் அமைக்கப்பட்டு விட்டது.

ஆனால், அதன் மூலமாக அமைந்த ஐக்கிய தேசியக் கட்சி மென்மேலும் தேய்ந்து கொண்டிருக்கின்றது. அதன் 'வாழ்நாள் தலைவரான' ரணில் தமது விதூஷகர்கள் கூட்டத்துடன் கட்சியை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு அதை முன் நகர விடுகின்றார் இல்லை. அவர் தனது எடுபிடிகளான சாகல ரட்ணாநயக்கா, அகில விராஜ் காரியவசம், பாலித ரங்க பண்டார என்ற குழுவோடு தனிச் சமா – ஆவர்த்தனம் – நடத்திக் கொண்டிருக்கின்றார்.

கடந்த மாதம் வரை ரணிலுடன் ஒத்து ஊதிக் கொண்டிருந்த நவீன் திஸநாயக்கா, தயா கமகே, அனோமா கமகே, லக்ஷ்மன் விஜேமான, அர்ஜுன ரணதுங்க, ரவி கருணாநாயக்கா ஆகியோர் இப்போது இரண்டும் கெட்டான் நிலையில். அதாவது திரிசங்கு நிலையில். ஐக்கிய தேசியக் கட்சியிலும் இல்லை, ஐக்கிய மக்கள் சக்தியிலுமில்லை என்ற நிலைமை.

ஐ.தே.கட்சி ஆட்சியில் இருந்தபோது அது பெரும் கெட்ட பெயர் சம்பாதிப்பதற்குக் காரணமாக இருந்தவர் நிதியமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்கா என்பது சஜித் தரப்பின் கருத்து. ரவி கருணாநாயக்காவை விட்டு விட்டு வந்தால் ஏனையோரை அரவணைக்கத் தயார் என்பது சஜித் அணியின் நிலைப்பாடு. அதனை ஏற்று ஏனையோர் சஜித் பக்கம் சேர்ந்து விட்டால் ரவி கருணாநாயக்கா நிராதரவாகிவிடுவார்.

ரணிலின் ஆட்சிக் காலத்தில் ரவி கருணாநாயக்கா போட்ட ஆட்டத்துக்கு கடைசியில் அரசியலில் அவருக்கு திரிசங்கு நிலைமைதான் கிட்டும்போல...!

★ ★ ★

இந்திய குடியரசுத் தினம் இன்று.

இலங்கை – இந்திய ராஜீக உறவு – இராஜதந்திர ஊடாட்டம் – மிகுந்த நெருக்கடியை எதிர்கொண்டுள்ள தருணம் இது.

தமிழக மீனவர் நால்வர் இலங்கைக் கடற்படையினரின் நடவடிக்கையின் போது கொல்லப்பட்டமை புதுடில்லியை சீற்றத்தில் ஆழ்த்தியிருக்கும் வேளை இது.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை எந்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இந்தியாவுக்குத் தாரை வார்ப்பதன் மூலம் புதுடில்லியை சாந்தப்படுத்தி விட – ஆற்றுகைப்படுத்தி விட – முடியாதா என்று கொழும்பு ஏங்குகின்றது.

இந்தியாவுக்கு மற்றொரு சகாயத்தையும் செய்வதற்கும் கொழும்பு தயார் என்று சில வட்டாரங்கள் கிசுகிசுத்தன.

ஏற்கனவே கொழும்புக்கு வெளியில் கண்டி, யாழ்ப்பாணம், ஹம்பாந்தோட்டையில் இந்தியத் துணைத் தூதரகங்கள் உள்ளன. அதற்கு மேலதிகமாக திருகோணமலையில் ஒரு துணைத் தூதரகத்தைத் திறப்பதற்கு 'பச்சைக்கொடி' காட்டும் நிலையில் கொழும்பு ஆட்சிப் பீடம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விடயங்கள் திட்டமிட்டபடி ஒப்பேறினால் இந்த ஆண்டு இறுதியில் திருகோணமலையில் ஒரு துணைத் தூதரகத்தை நீங்கள் காண முடியும் என்றன அந்த வட்டாரங்கள்.

ஒரு புறம் சீனாவையும் மறுபுறம் இந்தியாவையும் ஒரே சமயத்தில் அவரணைத்து கொண்டிருக்கும் கொழும்பின் தந்திரோபாயம் எவ்வளவு காலத்துக்கு செல்லுபடியாகும்? இரண்டு பெண்டாட்டிக்காரன் நிலைமை மாதிரி இழுபடாவிட்டால் சரிதான்...!

– மின்னல் –

## வேலணை பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அமைச்சின் உடனடி அறிவித்தல் மூலம் தூக்கிக் கடாசப்பட்டார். இந்த இடமாற்ற தொலை நகல் நேற்று மாலை மாவட்டச் செயலகத்திற்கு பறந்து வந்தது.

சோதிநாதனின் இடத்திற்கு தற்போது செட்டிகுளத்தில் பிரதேச செயலாளராகப் பணியாற்றும் கைலாசபிள்ளை சிவகரன் இடமாற்றப்பட்டுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த ஒரு வாரமாக கடற்படையினருக்குக் காணி அபகரிக்கும் முயற்சியும் அதனைத் தடுப்பதற்கான போராட்டங்களும் இடம்பெற்று வரும் நிலையில் இந்த பிரதேச செயலாளர் ஒரே நாளில் தூக்கி எறியப்பட்டுள்ளார். ஆக்கிரமிக்கப்படும் காணியை அளவீடு செய்வது தொடர்பான தகவல்கள் முன்கூட்டியே வெளியே கசிந்தது என்ற குற்றச்சாட்டில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## முன்னுரிமை அடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கும் திட்டம் தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் விளக்கியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்படி, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள முன்னணித் தொழிலாளர்களுக்குத் தடுப்பூசிகள் வழங்கப்படும் எனவும், தடுப்பூசி வழங்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்குத் தடுப்பூசிகள் கொண்டுவரப்பட்டதன் பின்னர் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டு கொழும்பில் சேமித்து வைக்கப்படவுள்ளன எனவும் அவர் கூறினார்.

அதன்பின்னர் ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்கவின் கீழ் உள்ள பணிக்குழு தடுப்பூசியை வழங்குவதற்கான நிலையங்களுக்குக் கொண்டு செல்வது மற்றும் சேமிப்பது தொடர்பான அனைத்துசெயற்பாடுகளையும்கையாளும் எனவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

அத்துடன் தடுப்பூசிகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு ஏதுவான இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவ்வாறான இடங்களுக்குத் தேவையானோர் வரவழைக்கப்பட்டு அவ்விடங்களிலேயே தடுப்பூசி வழங்கப்படும். மாறாக ஒவ்வொரு இடங்களுக்கும் எடுத்துச் சென்று தடுப்பூசி வழங்கப்படமாட்டாது எனவும் அவர் மேலும் கூறினார்.

## காலாவதியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
புதிய 'நீதி இல்லம்' நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு நேற்று அடிக்கல் நாட்டியதைத் தொடர்ந்து, உரையாற்றும்போதே, பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நீதித்துறையின் உதவியை நாடும் பொதுமக்களின் இல்லமாக புதிய கட்டடத் தொகுதி அமைய வேண்டும் என்பதே அரசின் எதிர்பார்ப்பாகும்.

ஒரு நாடு, ஒரே சட்டம் என்ற கருப்பொருளில் தேசிய நலனைக் கட்டியெழுப்புவதில் நாம் முன்னின்றிகின்றோம்.

நாட்டில் நீதி வழங்குவதன் தாமதங்களைத் தவிர்ப்பதற்கும், பிரச்சினைகளைத் திறம்பட தீர்ப்பதற்குமான அணுகுமுறையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாட்டில் சட்டம் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும். அத்துடன் நாட்டு மக்கள் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் – என்றார்.

# கிளிநொச்சி பல்கலைகழகத்தில் மாணவர் ஒருவருக்கு கொரோனா

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள பல்கலைகழகத்தின் பொறியியல் பீட மாணவர் ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்றையதினம் பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவில் கொரோனாத் தொற்றுறுதி செய்யப்பட்டது. இவர் குருணாகல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

அவரைக் கிளிநொச்சியில் அமைந்துள்ள கொரோனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனக் கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் சரவணபவன் தெரிவித்தார்.

இதே நேரம் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் 08 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

நேற்று 346 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவர்களில் சாவகச்சேரியில் ஒருவர், வவுனியாவில் ஒருவர், மன்னாரில் ஒருவர், யாழ். போதனா வைத்தியசாலையில் ஒருவர் ஆகியோருடன் கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள 04 பேர் என எண்மருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# 3வயதுச் சிறுமி மீது துஷ்பிரயோகம் பதினான்கு வயதுச் சிறுவன் கைது!

மூன்று வயதுச் சிறுமியைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 14 வயது சிறுவனொருவன் மினுவாங்கொடை பொலிசாரால் நேற்று முன்தினம்கைது செய்யப்பட்டுள்ளான்.

சிறுவன் அச்சிறுமியின் உறவினன் என்பது தற்போது தெரியவந்துள்ளது.

இச்சிறுமியின் தாய் மற்றும் தந்தை தொழில் நிமித்தம் வெளியில் செல்வதால் பாட்டியின் பாதுகாப்பிலேயே இருந்துள்ளார்.

விளையாடிவிட்டு வருவதாகக் கூறி சிறுமியை சந்தேக நபரான சிறுவன் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளான். இச்சந்தர்ப்பத்திலேயே சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சிறுமி கம்பஹா மாவட்ட தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சிறுவன் மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றத் தில் முன்னிலைப்படுத்தப்படவிருந்தான்.

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ராஜபக்ஷவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து யோஷித ராஜபக்ஷ தனது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு, கிழக்கு ஒத்துழைப்பு மற்றும் சமூக – பொருளாதார முயற்சிகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் தொடர்பில் ஆராயப்பட்டன என்று குறித்த பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வதந்திகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
விதங்களில் சில சிங்கள ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்த நிலையில், அந்தச் செய்திகளுக்கு – வதந்திகளுக்கு அவர் நேற்று முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

கொழும்பில் நிர்மாணிக்கப்படவுள்ள 'நீதி இல்லம்' கட்டடத் தொகுதிக்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அடிக்கல் நாட்டிவைத்தார்

இலங்கையின் நீதித்துறை செயற்பாடுகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதியான நீதி இல்லத்துக்கு பிரதமர் அடிக்கல் நாட்டிவைத்துள்ளார்.

இலங்கையின் நீதி அமைச்சு உட்பட நீதித்துறை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒரே கட்டடத்தின் கீழ் கொண்டுவரும் நோக்கில் இப்புதிய கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படுகின்றது.

கொழும்பில் 6 ஏக்கர் நிலப் பரப்பில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தக் கட்டடத் தொகுதிக்கு நிதி அமைச்சு 16 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

நீதி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் நான்கு கட்டங்களாக செயற்படுத்தப்படவுள்ள இந்த திட்டத்தை மூன்று வருடங்களில் நிறைவுசெய்ய எதிர்பார்ப்பதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

## 59 ஆயிரத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 59 ஆயிரத்து 167 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தவர்களில் 653 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை 50 ஆயிரத்து 337 பேர் குணமடைந்துள்ளமையுடன், 8 ஆயிரத்து 547 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## இலங்கையின் மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
எனவும், பிரிட்டனின் அணுகுமுறைகள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அறிவிக்கப்படும் என்றும் தூதுவர் சாரா ஹல்டன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேநேரம், பிரிட்டனின் பொதுநலவாய, அபிவிருத்தி விவகார அமைச்சர் தாரிக் அஹ்மட் இலங்கையின் மனித உரிமை நிலைமை குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரை முன்னிட்டு, கொரோனாத் தொற்றால் உயிரிழந்த மதக் குழுக்களின் உடல்களைக் கட்டாய எரிப்புக்கு உட்படுத்துவதன் தாக்கம், நீதி மற்றும் பொறுப்புக் கூறல் போன்ற விடயங்களை இலங்கை வெளிவிவகார அமைச்சரின் கவனத் துக்குக் கொண்டுவந்ததாக பிரிட்டன் அமைச்சர் தாரிக் அஹ்மட் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கை இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்குப் பதிலளிப்பதற்கு இம்மாதம் 27 ஆம் திகதி வரை கால வரையறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு முனையத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முதலீடுகள் அவசியமானவை.

இதனால் இலங்கையில் முதலீடு செய்ய இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய எந்த நாடு முன்வந்தாலும் அதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு.

நாட்டுக்கு முதலீடுகள் கிடைக்கும் போது இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நாங்கள் கிழக்கு முனையத்தில் முதலீடு செய்ய இந்தியாவின் நிறுவனத்திற்கு வாய்ப்பளிப்போம்.

இலங்கைக்கு அருகிலுள்ள நட்பு நாடு என்ற வகையில் இந்தியாவைப் பகைத்துக்கொள்ள முடியாது – என்றார்.

## மேலும் நால்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பேருவளை, தெரனியாகலை, வரகாகொட மற்றும் கொழும்பு – 8 ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 287 ஆக அதிகரித்துள்ளது.

# நாட்டை மோசமான நிலைக்கு கொண்டுசென்ற அரசு உடன் இராஜினாமாச் செய்ய வேண்டும்!



## சுனில் ஹந்துன்னெத்தி அதிரடி அறிவிப்பு

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் திட்டத்தில் அரசாங்கம் நாட்டை அதலபாதாளத்துக்கு இட்டுச் சென்றிருக்கின்றது. நாட்டை இந்த நிலைக்கு கொண்டு சென்றிருக்கும் அரசாங்கம் இராஜினாமா செய்யவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி அரசியல் சபை உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மேலும், கொரோனா தொற்றின் முதலாவது அலையின்போது அரசாங்கம் விரைவாக செயற்பட்டு முழுநாட்டையும் முடக்கியதுடன் மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்களையும் வீடுகளுக்கே கொண்டுபோய் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. வாழ்க்கைச் செலவுக்காக வசதி குறைந்தவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கியிருந்தது. மக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

ஆனால் தற்போது தேர்தல் முடிவடைந்து அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொண்டுள்ளது. ஜனாதிபதி தனக்குத் தேவையான அனைத்து அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார். என்றாலும் கொரோனா மீண்டும் தலைதூக்கி இருக்கின்றது.

முதலாவது அலையையும் விட வேகமாகத் தற்போது பரவி இருக்கின்றது. சுகாதார அமைச்சர் உட்பட நாடாளுமன்றத்தில் பலருக்கும் தொற்று ஏற்பட்டிருக்கின்றது. பாணியை குடித்தவர்களுக்கும் கொரோனா தொற்றியிருக்கின்றது. என்றாலும் கொரோனா தொற்று இன்னும் சமூகமட்டத்தில் பரவவில்லை என்றே அரசாங்கம் தெரிவிக்கின்றது. அத்துடன் கொரோனாவுக்கு தம்மிக்க பாணி சிறந்த மருந்தாக இருந்தால், சுகாதார அமைச்சர் அதனை பரிசோதித்துப் பார்க்க அனுப்பியிருக்க வேண்டும். ஆனால் எமது சுகாதார அமைச்சர் அந்த பாணியை குடித்து, மற்றவர்களும் அதனை குடிப்பதற்கு வழிகாட்டியிருந்தார். தற்போது என்ன நடந்தது. பாணியை குடித்த சுகாதார அமைச்சருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கின்றது.

உண்மையான அரசாங்கமாக இருந்தால் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் திட்டத்தில் நாட்டை மோசமான நிலைக்கு கொண்டு வந்திருப்பதையிட்டு இராஜினாமா செய்திருக்கவேண்டும்.

அதனால் பொறுப்புவாய்ந்த அரசாங்கம் நாடு எதிர்கொண்டுள்ள மோசமான நிலைதொடர்பில் மிகவும் பொறுப்பில்லாமலேயே செயற்பட்டு வருகின்றது. இந்த அரசாங்கத்தை அதிகாரத்துக்குக் கொண்டுவந்த மக்களே இன்று அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் விரக்தியடைந்திருக்கின்றனர். - என்றார்.

# கொவிட்டில் இறந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்கும் பொறுப்பை ஜனாதிபதியே ஏற்க வேண்டும்!

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. கோரிக்கை



அரசாங்கத்தின் அனைத்து விடயங்களையும் பொறுப்பேற்பதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். அப்படியானால் கொவிட்டில் மரணிப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதால் பிரச்சினை இல்லை என நிபுணர்குழு தெரிவித்திருந்தும் அரசாங்கம் தொடர்ந்து சடலங்களை எரித்து வருகின்றது. முஸ்லிம்கள் ஜனாஸாக்களை எரிக்கும் பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்றுக்கொள்ளவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொவிட்டில் மரணிப்பவர்களை அடக்கம் செய்ய முடியும் எனத் தெரிவித்து, சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவின் அறிக்கையை அரசாங்கம் செயற்படுத்தாமல் இருக்கின்றமை தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் தெரிவித்த அவர் -

கொவிட்டில் மரணிப்பவர்களை அடக்கம் செய்கின்றமை தொடர்பாக அரசாங்கத்துக்கு தீர்மானம் எடுக்கமுடியாது. அது சுகாதாரம் தொடர்பான பிரச்சினை என்பதால் சுகாதார பிரிவினரின் தீர்மானத்துக்கமைய செயற்படத் தயார் என அரசாங்கம் தெரிவித்து வந்தது. அதன் பிரகாரம் கொவிட்டில் மரணிப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்யலாமா என ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சு விசேட நிபுணர்கள் குழுவொன்றை நியமித்திருந்தது. அந்தக் குழு தனது அறிக்கையை கடந்த மாதம் இறுதியில் சுகாதார அமைச்சுக்குக் கையளித்திருந்தது.

அத்துடன் அரசாங்கத்தின் தொழிநுட்ப குழுவின் வைரஸ் தொடர்பான நிபுணர்கள் இல்லை. அதில் சட்ட வைத்தியர்களும் அரசாங்க வைத்திய அதிகாரிகளின் ஆலோசனையாளர்களுமே இருக்கின்றனர். ஆனால், சுகாதார அமைச்சால் அமைக்கப்பட்ட நிபுணர்குழுவின் 11பேரில் 6 பேர் வைரஸ் தொடர்பான விசேட நிபுணர்களாவர். ஏனையவர்கள் வேறு துறைசார்ந்த நிபுணர்கள். இவர்களின் அறிக்கையை அரசாங்கம் தற்போது மறைப்பது அரசியல் நோக்கத்துக்காகும். - என்றார்.

# ரோஹித மீதான இலஞ்ச ஊழல் வழக்கு பெப்ரவரியில் விசாரணைக்கு வருகின்றது!



அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேல்நீதிமன்றத்தில் இந்த வழக்கு பெப்ரவரி 5 ஆம் திகதி 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதிபதி அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆட்சியில் 41.2 மில்லியன் ரூபா மதிப்புள்ள சொத்துக்களை சட்டவிரோதமாகக் கையகப்படுத்தியதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# சமிந்த விஜேசிறி, ஹேஷ விதானகே தனிமைப்படுத்தப்பட்டு உள்ளார்கள்!

நாடாளுமன்ற உறுப்பினர்களான சமிந்த விஜேசிறி மற்றும் ஹேஷ விதானகே ஆகியோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவிற்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து அவருடன் நெருங்கிய தொடர்புடைய குறித்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்புரிமை பெற்றார் சம்பிக்க!



முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஐக்கிய மக்கள் சக்தியில் நேற்று (திங்கட்கிழமை) உத்தியோகபூர்வமாக இணைந்துள்ளார்.

அவருக்கு உறுப்புரிமையை வழங்க ஏற்கனவே செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக கட்சியின் ஊடக பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும் அடுத்த வாரம் இடம்பெறவுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொள்வார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியில் பொதுச் செயலாளர் பதவியில் இருந்தும் கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்தும் 2020 டிசெம்பரில் சம்பிக்க ரணவக்க விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கோட்டாவின் விசாரணைக் குழுவை கண்டு சர்வதேசம் ஏமாறக் கூடாது!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை

சர்வதேச விசாரணையைத் தவிர்க்கும் நோக்கிலேயே கோட்டாபய உள்ளக விசாரணைக்குழுவை அமைத்துள்ளார். எனவே இந்த விசாரணைக்குழுவைக் கண்டு சர்வதேசம் ஏமாறக்கூடாது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரித்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

சர்வதேச விசாரணையை உடனடியாகத் தவிர்க்கும் நோக்கிலேயே கோட்டாபய ராஜபக்ஷ ஆணைக்குழுவை அமைத்துள்ளார். சர்வதேச அளவில் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான அழுத்தங்கள் ஏற்படும் போதெல்லாம் இப்படியான விசாரணைக் குழுக்களை அமைப்பது இலங்கைக்கு வாடிக்கையாகவுள்ளது.

அந்தவகையில் நீண்ட காலம் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது இலங்கையில் குறைந்தது 12 இற்கும் மேற்பட்ட உள்ளக விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஆனால், ஒன்றின் மூலமும் எவரும் நீதியின் முன்நிறுத்தப்படவில்லை அல்லது காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டு பிடித்து அவர்களின் குடும்பங்களுக்கு உதவவில்லை.

இலங்கை அரசால் அமைக்கப்பட்ட உள்நாட்டு விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் பெரும்பாலும் வெளியிடப்படவில்லை, மேலும் அதில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவுமில்லை.

சர்வதேசப் பார்வையாளர்கள் மற்றும் ஐ.நா. வல்லுநர்களால் இலங்கையின் சட்ட வழிமுறைக் கட்டமைப்புகளில் ஆழமான பிரச்சினைகள் உள்ளன என்பது தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2012 இல் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில், தான் முன்னர் நடத்திய விசாரணையின் அடிப்படையில் இயற்றிய தீர்மானத்தில் கூறப்பட்டிருந்த பரிந்துரைகளை நிறைவேற்றும்படி இலங்கை அரசைக் கோரியது. ஆனால், அது நடைபெறாத நிலையில், போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் தேவை என்பது உணரப்பட்டது.

அதே போல் 2015 இல் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஏகமனதான தீர்மானமொன்றில் இலங்கை இணைந்து உண்மை, நீதி, இழப்பீடு குறித்து ஆராயவும் மற்றும் அது போன்ற குற்றங்கள் மீண்டும் இடம்பெறாது என்பதையும் உறுதியளித்தது. அதேவேளை, பொறுப்புக் கூறல் தொடர்பில் சர்வதேச நீதிபதிகள், குற்றஞ்சாட்டும் வழக்கறிஞர்கள், விசாரணையாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் சட்டத்தரணிகள் ஆகியோரை உள்வாங்கவும் இலங்கை உடன்பட்டது.

அந்த வழிமுறை மந்தமாக முன்னேறினாலும் அதனால் ஊக்கமடைந்த ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் அதற்கான காலகட்டத்தை நீடித்தது என்றாலும் நவம்பர் 2019 இல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையை அந்தத் தீர்மானத்திலிருந்து விலக்கிக் கொண்டு அதனால் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் ஒழித்துக் கட்டினார் என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஒன்றுபடத் தயாரா?

சிறுபான்மையினருக்கு எதிராக பௌத்த, சிங்கள பேரினவாதத்தைக் கக்கி, அதனை தென்னிலங்கையில் ஒரு கிளர்ச்சியாக எழுச்சியுற வைத்து, அதன் மூலம் இலகுவாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட கோட்டாபய ராஜபக்ஷ அதிகார மையம், அதிகாரத்தை முழுமையாகக் கைப்பற்றிய பின்னரும் தன்னைத் திருத்திக் கொள்வதாகவோ, மாற்றிக் கொள்வதாகவோ இல்லை.

இலங்கைத் தீவில் சிறுபான்மையினர் – குறிப்பாகத் தமிழர்களும், முஸ்லிம்களும் – தனித்துவமாக வாழ்வதற்கான அத்திபாரங்களை தனது பேரினவாத அஷுபக்கரம் மூலம் தேடித் தேடி அழித்து நிர்மூலமாக்குவதே அதன் திட்டமாக விரிகின்றது.

அதன் விளைவுகளை – பெறுபேறுகளை – விதைத்த வினையின் மகசூலை – அது பெற வேண்டிய காலம் இப்போது தொடங்கி விட்டது போலும்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46 ஆவது அமர்வு அடுத்த மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாவதையொட்டி இலங்கைக்கு எதிராக சர்வதேச சமூகம் அணி திரண்டிருப்பது இந்த 'பாவக் கணக்கெடுப்பின்' ஆரம்பம் என்றே தோன்றுகின்றது.

கோட்டா அரசின் ஈவு இரக்கமற்ற பேரினவாத ஆக்கிரமிப்புப் போக்கு சிறுபான்மையினரைப் பொறுத்தவரை ஒரு நல்ல வேலையைச் செய்திருக்கின்றது. – இழப்பிலும் ஆசீர்வாதம் (Blessing in disguise) என்பது போல.

பேரினவாத நெருக்குவாரம் உச்சத்தைத் தொட்டு நிற்பதால் சிறுபான்மை இனங்கள் தங்களுக்கிடையேயும், தமக்குள்ளும் ஒன்றுபட்டு நின்று அதனை எதிர்க்கும் நிலைப்பாட்டை தாமே கைக்கொள்ளும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

அப்படி ஓர் எதிர்ப் பிரதிபலிப்பு எழுந்திருப்பதை பேரினவாத ஆட்சியாளர்களே பதற்றத்துடன் எடுத்துரைக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்ற தனது பரிந்துரையுடன் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரினால் இலங்கை தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கை கொழும்புக்கு உரிய பாடத்தைப் புகட்டியிருக்கின்றது.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் இந்த அறிக்கைக்குப் பின்னால் புலம்பெயர் தமிழர்கள் இருக்கின்றார்கள் என்று சூக்குர விட்டிருக்கின்றார் இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான அட்மிரல் ஜயநாத் கொலம்பகே.

இந்த விடயத்தின் பின்னணியில் புலம்பெயர் தமிழர்கள் மட்டுமல்லர், தாயகத் தமிழர்களும் கூடத்தான் இருக்கின்றார்கள். இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை ஒட்டுமொத்தத் தமிழினத்தின் ஏகோபித்த வேண்டுகோள். ஆக, பதவிச் சுகத்துக்காக – பவிசுக்காக – உழைப்புக்காக – சிங்கள அரசுகளுக்கு செம்புகாவும் அல்லக்கைகளும் அவர்களின் ஆதரவாளர்களும் தவிர ஒட்டுமொத்தமான தமிழினமும் இந்த விடயத்தில் ஐக்கியப்பட்டேயிருக்கின்றது.

முன்னர் நல்லாட்சி அரசின் காலத்தில் இலங்கையைக் குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டு போகவேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்தாத தமிழ்க் கூட்டமைப்புக் கூட இப்போது அதனை வலியுறுத்தி நிற்கின்றது. அதாவது கோட்டா அரசின் நட்டாமுட்டித்தனமான பேரினவாதத் திமிர்ப் போக்கு தமிழர்களை ஐக்கியப்படவைத்திருக்கின்றது.

இலங்கை விவகாரத்தை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திடம் பாராதீனப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முன்னெடுத்த கையெழுத்துப் போராட்டத்தில் 18 லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் ஒப்பமிட்டு அதனை ஓர் ஏகோபித்த கோரிக்கையாக அங்கீகரித்துள்ளனர்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கூறுவது போல் இந்த விடயத்தில் – இலங்கையை சர்வதேச நீதிமன்றுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டில் – தமிழர் அரசியல் அரங்கில் ஒன்றுபட்ட கருத்துருவாக்கம் ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மட்டுமல்ல, சிவில் அமைப்புகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்புக்கள் போன்ற அனைத்துத் தரப்பினரும் இணைந்து இக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றனர்.

புலம் பெயர் தமிழர்கள் மட்டுமல்லர், தமிழர் தாயகமும் புலமும் சேர்ந்து ஒட்டு மொத்தமாக சர்வதேசத்திடம் நீதிவேண்டி சமர்ப்பித்த கோரிக்கையாக இது வெளிப்பட்டுள்ளது.

அதனையே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரும் தமது பரிந்துரையாக முன்வைத்திருக்கின்றார்.

இதே சமயம் பேரினவாத அடக்குமுறையை எதிர்கொள்ள முடியாத மற்றைய சிறுபான்மை இனமான முஸ்லிம் சமூகம், அந்த நெருக்குவாரத்தில் தகித்துக் கொண்டிருக்கின்றது.

பேரினவாதமே தமது ஒரே – ஒற்றைப்பட்ட – கொள்கையும், இலக்கும், நோக்கமும் என்று திமிர்கொண்டு நிற்கும் இந்த ஆட்சிப் பீடத்திடமிருந்து தயவு, தாட்சண்யமோ, நீதியோ, நியாயமோ தமக்குக் கிடைக்காது என்பதை இப்போது நன்கு உணர்ந்துள்ள முஸ்லிம்களும் கூட இனிமேல் சர்வதேசத்திடம் தான் முறைமீடு செய்ய வேண்டியிருக்கும். ஏற்கனவே அதனை அவர்கள் ஆரம்பித்தும் விட்டனர்.

பேரினவாத மேலாதிக்கத்தை – மேலாண்மை போக்கை – சிறுபான்மையினர் வெற்றிகரமாக எதிர்கொள்வதாயின் அதற்கு இரண்டு விடயங்கள் முக்கியம். சிறுபான்மையினரான தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களுக்குள்ளும், தங்களுக்கு இடையேயும் ஒன்றுபட்டு அந்த மேலாதிக்க அச்சுறுத்தலை எதிர்கொள்ளவேண்டும்.

தமிழர்கள் ஓரளவுக்குத் தங்களுக்குள் ஓரணி சேர்ந்து விட்டனர். முஸ்லிம்களுடனும் ஒன்றித்துப் பயணிக்கத் தயாராகி விட்டனர். முஸ்லிம்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டு பேரினவாதத்தை எதிர்க்க – எதிர்கொள்ள – தயாராகி விட்டனரா? அவர்கள்தான் பதில் கூற வேண்டும்.

# வாசுதேவ மற்றும் ஹக்கீம் தொற்றில் இருந்து மீண்டனர்



கொரோனாத் தொற்றுக்கு உள்ளான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் பூரண குணமடைந்து சிகிச்சை நிலையத்தில் இருந்து வெளியேறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கடந்த வாரம் தனது டுவிட்டர் பக்கத்தில் அறிவித்தார்.

மேலும் கடந்த 10 நாள்கள் தொடர்பில் இருந்தவர்களையும் சுகாதார அதிகாரிகளின் அறிவுரையைப் பின்பற்றி தனிமைப்படுத்திக்கொள்ளுமாறும் ரவூப் ஹக்கீம் கேட்டுக் கொண்டார்.

அதன்பின்னர் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிற்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தார்.

அண்மையில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவிற்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

அதனைத்தொடர்ந்து, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகிய இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வட மாகாணத்தில் தனியார் கல்வி நிலையங்களை மீளத்திறக்க அனுமதி

கொவிட் – 19 தொற்றுநோய் காரணமாக இடைநிறுத்தப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களை நேற்று 25 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மீள ஆரம்பிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைக் அமைவாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வடக்கு மாகாணத்தில் தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்களை நடத்தவேண்டும் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், ஒவ்வொரு பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியும் தனியார் கல்வி நிலையங்களில் கொவிட் – 19 சுகாதார நடைமுறைகள் பின்பற்றுவதைக் கண்காணிப்பாளர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வகுப்பில் இருக்கைகளின் திறனில் 50 சதவீதம் வரை அல்லது அதிகபட்சம் 100 மாணவர்களுக்கு மட்டுமே இடமளிக்க முடியும் என்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயணத் தடை மற்றும் தனிமைப்படுத்தல் நடைமுறைப்படுத்தும் பகுதிகளில் தனியார் கல்வி நிலையங்களை நடத்த முடியாது என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேற்று காலை 6 மணி முதல் பல பகுதிகள் தனிமைப்படுத்தலில்

நாட்டில் நேற்று காலை 6 மணிமுதல் புதிதாக பல பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக கொவிட் பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையத்தால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி கண்டி, பூஜாபிட்டிய சுகாதாரப் பிரிவில் உள்ள பள்ளியகொட்டுவ மற்றும் கல்ஹின்ன கிராம சேவகர் பிரிவு, அம்பலாந்தோட்டையில் உள்ள 140 போலானா தெற்கு கிராம சுகாதாரப் பிரிவுக் குள் உள்ள மெல்கொனிய கிராமம் ஆகிய பகுதிகள் நேற்று காலை 6 மணிமுதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை நேற்றைய தினம் மாலை 6 மணி முதல் வெள்ளவத்தை பொலிஸ் பிரிவின் நசீர் தோட்டம், நிட்டம்புவ பொலிஸ் பிரிவின் திஹாரிய வடக்கு மற்றும் திஹாரிய கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளின் வாரண விகாரை வீதி, கத்தொட்ட வீதி மற்றும் ஹித்ரா மாவத்த வீதிகளுக்கு உட்பிரவேசிக்கும் பிரதேசங்களும், மினுவாங்கொட பொலிஸ் பிரிவின் கல்லொழுவ கிழக்கு மற்றும் கல்லொழுவ மேற்கு ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தலிலிருந்து நீக்கப்பட்டன.

அதேநேரம் மினுவாங்கொட பொலிஸ் பிரிவின் கல்லொழுவ பிரதேசத்தின் ஜும்மா பள்ளிவாசல் வீதி, ஹித்ரா மாவத்த, புதிய வீதி மற்றும் அகரகொட ஆகிய பகுதிகளில் நேற்று மாலை 6 மணிமுதல் புதிதாக தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக கொவிட் பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்தது.

# உக்ரைன் சுற்றுலா பயணிகள் மேலும் சிலர் நாடு வந்தடைவு!

உக்ரேனைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளில் மேலும் சிலர் மத்தளை சர்வதேச விமான நிலையத்தை நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் வந்தடைந்தனர்.

உக்ரேன் விமான சேவைகளுக்குச் சொந்தமான பி.எஸ்.6385 ரக விமானத்தில் 189 சுற்றுலாப் பயணிகள் இவ்வாறு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வரும் திட்டத்தின் கீழ் இவர்கள் நாடு திரும்பியுள்ளனர் என்பதுடன், இந்த நாட்டுக்கு வருகை தந்த 12 ஆவது உக்ரேன் நாட்டு சுற்றுலாக் குழுவினர் இவர்கள் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை உக்ரேனிலிருந்து வருகை தந்திருந்த 178 சுற்றுலாப் பயணிகள் மீண்டும் உக்ரேன் நோக்கி புறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுநாயக்க பாதுகாப்புப் பணியாளர் 11 பேருக்குக் கொரோனாத் தொற்று!

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பணிபுரியும் 11 பாதுகாப்புப் பணியாளர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து லிமிடெட் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்கள் ஜா – எல பகுதியில் வசிப்பவர்கள் ஆவர்.

இந் நிலையில் சுகாதார அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் தங்களது வீடுகளில் தனிமைப்படுத்திக் கொள்ளுமாறும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பாதுகாப்பு படையினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த விமான நிலைய அதிகாரிகளின் மற்றொரு குழு பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

# ஐ.நா. ஆணையாளரின் அறிக்கைக்கு நாளை பதில் நட்பு நாடுகளிடம் ஆதரவு கோருகின்றது இலங்கை!

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செலே பச்செலெட்டின் அறிக்கை தொடர்பாக இலங்கை அரசாங்கம் தனது நிலைப்பாட்டைத் தீர்மானித்ததும் அதனைப் பகிரங்கப்படுத்தும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயனத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு பரிந்துரை செய்துள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர், யுத்தக் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைப் பெறுவதற்கான சர்வதேசப் பொறிமுறையொன்று தொடர்பாகவும் பரிந்துரை செய்துள்ளார்.

அத்துடன், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் என நம்பகத்தன்மை மிக்க விதத்தில் குற்றச்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக பயணத்தடைகள் விதிக்கப்படலாம் எனவும் அவர்களின் சொத்துக்கள் முடக்கப்படலாம் என்றும் ஆணையாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார் என ஜயனத் கொலம்பகே குறிப்பிட்டுள்ளார்.

என்றபோதும், ஆதாரங்கள் எவையும் நிரூபிக்கப்படாதவர்களுக்கு எதிராகவே இந்த குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளமையுடன், அவர்கள் குற்றம்சாட்டப்பட்டவர்கள் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.





இந்தத் தருணத்தில் அவசியமற்ற சில விடயங்கள் அந்த அறிக்கையில் காணப்படுகின்றன எனக் கருதுவதாகவும், அவதூறு கற்பிக்கமுனையும் நாடுகள் சிலவற்றை விட இலங்கையர்களான நாம் அமைதியாகவும் ஸ்திரத்தன்மை மிக்கவர்களாகவும் காணப்படுகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முன்னைய அறிக்கைகளை விட இந்த அறிக்கை மோசமானது எனவும் இலங்கையில் ஆபத்தான போக்கு தென்படுகின்றது என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர் என ஜயனத்கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நீதிபொறிமுறை, வெளிநாட்டு நீதிபதிகள் ஆகிய விடயங்களைத் தவிர ஐக்கிய நாடுகளுக்கு வழங் கிய உறுதிமொழியில் காணப்படும் அனைத்தையும் இலங்கை நிறைவேற்றிவிட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கைக்கான தனது பதிலை இலங்கை நாளை புதன்கிழமை சமர்ப்பிக்கும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கைக்கு எதிராக இன்னொரு தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என்ற தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் இலங்கைக்கு ஆதரவளிக்க நட்புநாடுகளையும் ஒத்த நிலைப்பாடுகளைக் கொண்ட நாடுகளையும் கேட்டுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், புதிய தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ள அவர், ஆனால், புதிய தீர்மானம் கிடைப்பதற்காக காத்திருக்கின்றோம் என அவர் கூறியுள்ளார்.

## வசந்த யாப்பா பண்டார எம்.பிக்கு கொரோனாத் தொற்று உறுதி!

கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹகீம் ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் 31 பேரும் பணியாளர்கள் பலரும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றில் சகலருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டுமென சபாநாயகர் வலியுறுத்தியிருந்தார்.

அதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதில் இலங்கை நாடாளுமன்றில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டது.




மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஐவருக்கு இதுவரை கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் வசந்தயாப்பா பண்டாரவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கமைய இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நாடாளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, தயாசிறி ஜயசேகர மற்றும் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஆகியோர் பூரண குணமடைந்து சிகிச்சை நிலையத் தில் இருந்து வெளியேறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கையின் ஊழலற்ற அதிகாரியாக யாழ்.பிரதேச செயலாளர் தெரிவானார்!

கொழும்பு, ஜன.26

2020 ஆம் ஆண்டில் இலங்கையின் ஊழலற்ற அதிகாரிகள் தேர்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்ன் ஐவரில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு, விருது பெற்றுள்ளார்.

ரான்ஸ்பரன்ஸி இன்ரநனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தால், ஊழலற்ற நிர்வாகத்துக்கான குறுஞ்செய்தி அனுப்பும் வாக்கெடுப்பில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்ஷன் பொதுமக்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்த தேர்தல் கடந்த வெள்ளிக்கிழமை முடிவடைந்த நிலையில், அவருக்கு பெருமளவில் வாக்குகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இதனையடுத்து இலங்கையின் ஊழலற்ற அதிகாரியாக தெரிவுசெய்யப்பட்ட பிரதேச செயலாளர் எஸ்.சுதர்ன், கடந்த ஞாயிற்றுக்கிழமை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



இந்த விருதை முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய வழங்கி வைத்தார்.

## கனடாவில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது தீர்மானம்!

இலங்கையின் உள்நாட்டுப் போரில் உயிரிழந்த தமிழ் மக்களை நினைவுகூரும் வகையில் ஒரு நினைவுச் சின்னத்தை கட்டுவதாக கனடாவின் பிரம்ப்டன் மேயர் பெட்ரிக் பிரவுண் உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு, நினைவுச் சின்னத்தைக் கட்டுவதற்கு கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை, பிரம்ப்டன் நகர சபை ஏகமனதாக வாக்களித்தாக பிரம்டன் மேயர் பெட்ரிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் அழிக்கப்பட்டது.

இது, போரில் இறந்த தமிழ் மக்களை நினைவுகூருவதற்காக 2019 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட நிலையில், இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து உலக அளவில் தமிழ் மக்கள் பரந்து வாழும் தேசங்களில் மக்களின் சீற்றத்துக்கு வழிவகுத்தது.

இதுதொடர்பாக, தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ள பெட்ரிக் பிரவுண்–

பிரம்ப்டன் நகர சபை ஒருமனதாக முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை அமைக்க வாக்களித்தது.

இலங்கையின் ஆட்சியாளர்கள், தங்களது சொந்த இரத்தக் கறை படிந்த வரலாற்றை வெள்ளையடிக்க முயற்சிக்கும் அதேவேளையில், கனடாவிலும் இதற்கு நேர்மாறாக நாங்கள் செய்வோம்.

தமிழ் இனப்படுகொலையை நாம் மறக்க மாட்டோம். பாதிக்கப்பட்டவர்களை நாங்கள் நினைவில் கொள்கிறோம். தமிழ் இனப் படுகொலையின் போது 75 ஆயிரம் தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என ஐ.நா. மதிப்பிடுகிறது.

முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தின் அழிவு இலங்கை அரசாங்கம் ஒரு கலாசார இனப்படுகொலையைத் தொடரவும், பாதிக்கப்பட்டவர்கள் இல்லை என்று பாசாங்கு செய்து வரலாற்றை மீண்டும் எழுதவும் முயன்றது. – என்று குறிப்பிட்டுள்ளார்.

## பாணந்துறையில் சூடு: ஒருவர் பரிதாப சாவு!

*பாணந்துரை, பள்ளிமுல்ல பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.*

*அந்தப் பகுதியில் ஓட்டோவில் பயணித்த குழு மீதே மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.*

*இந்த சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை, பலனின்றி உயிரிழந்துள்ளார்.*

*துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர்கள் இன்னும் அடையாளம் காணப்படாத நிலையில் பாணந்துறை - வடக்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

## இராஜதந்திர உறவுகளை மேம்படுத்த இலங்கை – பிலிப்பைன்ஸ் உடன்பாடு

பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் தற்போதுள்ள பொருளாதார, அரசியல், சமூக மற்றும் சர்வதேச உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய உத்திகள் தொடர்பாகக் கவனம் செலுத்துவதற்கு இரு நாடுகளினதும் வெளிநாட்டு அமைச்சர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 60 ஆவது ஆண்டுவிழாவில் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தை வாழ்த்துவதற்காக வெளிநாட்டு அமைச்சர் தியோடோரோ எல். லோக்சின்னுக்கு வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்கொண்ட தொலைபேசி உரையாடலொன்றின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் பிலிப்பைன்ஸ் தூதரகம் அமைப்பது தொடர்பாகவும், இரு நாடுகளுக்கும் இடையே விமானங்களை சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும் இரு தரப்பினரும் இந்த தொலைபேசி உரையாடலின் போது கலந்துரையாடினர்.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர்களுக்கு அதிக வாய்ப்புக்களைப் பெறுவதிலான பிலிப்பைன்ஸின் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவும், கிடைக்கக்கூடிய வழிமுறைகளை அடையாளம் காணவும், இந்த முயற்சியில் இலங்கைக்கு உதவுவதற்கும் பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு அமைச்சர் ஒப்புக் கொண்டார்.

இந்தப் பேச்சின் போது, உற்பத்தி மற்றும் சேவைத் துறையில் ஒன்றிணைந்து பணியாற்றவும், இரு நாடுகளின் வர்த்தக மற்றும் தொழில்துறை சபைகளுக்கிடையில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கான அதிக வாய்ப்புக்களை வழங்கவும் இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

இலங்கையுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணுவதில் கடந்த 60 ஆண்டுகளில் அளித்த ஆதரவுகளுக்காக இலங்கை அரசாங்கத்தின் நன்றிகளை அமைச்சர் தினேஷ் குணவர்தன பிலிப்பைன்ஸ் அரசாங்கத்துக்குத் தெரிவித்தார்.

# சுதந்திர தினம் வடக்கு, கிழக்கில் கரிநாள் மாபெரும் எழுச்சிப் பேரணிக்கும் ஏற்பாடுகள்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு

சுதந்திர தினத்தை தமிழர்கள் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி வடக்கு கிழக்கு தழுவிய எழுச்சிப் பேரணிகளை நடத்தவுள்ளனர் என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் பணிப்பாளர் பத்மநாதன் கருணாவதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

பெப்ரவரி நான்காம் திகதி தமிழர்களின் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாத கரிநாளாகும்.

ஆங்கிலேயர்களின் ஆதிக்கப் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்ட இலங்கைத் தீவு, தமிழர்களின் மீது இனவழிப்பைக் கட்டவிழ்த்துவிட்ட நாள். ஈழத் தமிழர்களின் உரிமைகளும், சுதந்திரமும் பறிக்கப்பட்ட நாளாகும்.

1948 இல் ஆட்சிப்பீடம் ஏறிய சிங்கள, பௌத்த ஆட்சியாளர்களால் பல இலட்சக் கணக்கான தமிழர்கள் உயிரிழந்தும் எஞ்சியவர்களின் உரிமைகளையும், உடைமைகளையும் அழித்தொழித்து தமிழர்கள் தமது சொந்த நிலத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் அகதிகளாக வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையே நடைபெற்ற மோதல் என்பது ஓர் அரசாங்கம் சார்ந்தோ அல்லது கட்சி சார்ந்தோ நடைபெற்றதல்ல.

ஸ்ரீலங்கா அரசு தமிழ்த் தேசத்தை அழித்து ஒட்டுமொத்த இலங்கைத் தீவையும் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரித்தானதாக மாற்றியமைக்க முயற்சித்தபோது அதனை எதிர்த்துத் தமிழர் தமது அடையாளத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஆட்சிக்கு வந்த அனைத்துத் தரப்புக்களும் இலங்




கைத்தீவு சிங்கள பௌத்த நாடு என்ற அடிப்படையிலேயே செயற்பட்டார்கள். இப்போதும் செயற்பட்டுக் கொண்டு உள்ளார்கள்.

2009 இல் ஆயுத வழியில் நசுக்கப்பட்டு முடிவடைந்த போர் தமிழினப் படுகொலையோடு நிறைவுக்கு வந்திருந்தது. அத்தகைய தமிழினப் படுகொலை நடைபெற்றபோது அதனோடு நிகழ்ந்த பல குற்றங்களை மூடி மறைப்பதற்கு 2009 இல் ஆட்சியிலிருந்த அரசாங்கம் மட்டுமல்லாது சிங்கள தேசத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து அரசாங்கத் தரப்புகளுமே முயன்றனர். அதே சூழலே இன்றும் உள்ளது.

தமிழர்களின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் பறித்துவிட்டு சிங்கள தேசம் தனது 73 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு உள்நாட்டிலும், புலம்பெயர் தேசங்களிலும் தயாராகிக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான நிலைப்பாட்டில் தமிழர்களாகிய நாம் சுதந்திர தினத்தைப் புறக்கணித்து தமிழின அழிப்பிற்கு சர்வதேச நீதியைப் பெறுவோம்.

பொறுப்புக்கூறலும் தமிழ் மக்களுக்குரிய நீதியும் கிடைப்பதாக இருந்தால் முழுமையான சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையூடாகவே சாத்தியமாகும். அவ்வகையான சர்வதேச குற்றவியல் விசாரணை சர்வதேச குற்றவியல் நீதிமன்றமூடாகவோ அல்லது சர்வதேச குற்றவியல் விசேட தீர்ப்பாயம் ஒன்றினூடாகவோ ஸ்ரீலங்காவை உடன் விசாரிக்க வேண்டும்.

அந்தவகையில், இந்த இரண்டு பொறிமுறைகளில் ஏதாவது ஒன்றின் மூலமேனும் பாதிக்கப்பட்ட மக்களாகிய எமக்கு நீதி கிடைக்கும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

இனியாவது ஸ்ரீலங்காவை விசாரிப்பதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட ஐ.நா. உறுப்பு நாடுகள் பாதுகாப்புச் சபைக்குப் பரிந்துரை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியும் பெப்ரவரி நான்காம் திகதி கரிநாளாகப் பிரகடனப்படுத்தி வடக்கு கிழக்கு தழுவிய மக்கள் எழுச்சிப் பேரணி நடத்த எமது அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் பெப்ரவரி நான்காம் திகதி, வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சியில் காலை 8.30 மணிக்கு கந்தசுவாமி ஆலய முன்றிலில் பேரணி ஆரம்பமாகும். கிழக்கு மாகாணம் சமநேரத்தில், மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் ஆரம்பமாகி காந்தி பூங்காவைச் சென்றடையும்.

இந்தப் பேரணிக்கு மத குருக்கள், பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், சமூக அமைப்புக்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என அனைவரும் தங்களது ஆதரவை வழங்கி சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி, சர்வதேச விசாரணைக்கு வலுச்சேர்க்குமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம். – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**மன்னாரில் இளைஞர் குழு அட்டகாசம்:**

## பாதுகாப்பு கோரி நீதிவான்முன் தஞ்சமடைந்த பொது மக்கள்!

மன்னார் – சாவக்கட்டு கிராமத்திற்குள் நுழைந்த இளைஞர் குழுவொன்று அங்குள்ள வீடுகளில் புகுந்து தாக்குதல் நடத்தியமையால், தங்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரி அந்தப் பிரதேச மக்கள், நீதிவான் வாசஸ்தலத்துக்கு முன் தஞ்சமடைந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சாவக்கட்டு கிராமத்திற்குள் நுழைந்த இளைஞர் குழுவொன்று அங்குள்ள வீடுகளினுள் அத்துமீறி நுழைந்து ஆண்கள், பெண்கள் மற்றும் வயோதிபர்கள் என அனைவர் மீதும் தாக்குதல் நடத்தி, தப்பிச்சென்றுள்ளனர்.

இதனையடுத்து அந்தக் கிராம மக்கள் தமக்குப் பாதுகாப்பு வழங்க கோரி இரவு 8 மணியளவில் மன்னார் மாவட்ட நீதிவானின் வாசஸ்தலத்திற்கு முன் ஒன்று கூடி, போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது–

சாவக்கட்டு கிராமத்திற்குள் ஞாயிறு இரவு சுமார் 10 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் முக்கவசம் மற்றும் தலைக்கவசம் அணிந்து, கூரிய ஆயுதங்களுடன் சென்ற இளைஞர் குழு, அந்தக் கிராமத்திலுள்ள வீடுகளுக்குள் சென்று, அனைவர் மீதும் சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் பெண் உட்பட இருவர் காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மேற்படி சம்பவத்தால் அச்சமடைந்த கிராம மக்கள், ஒன்று சேர்ந்து இரவு 8 மணியளவில், மன்னார் மாவட்ட நீதிவானின் வாசஸ்தலத்திற்கு முன் ஒன்று கூடி, போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

தமக்கு உரிய பாதுகாப்பை வழங்குமாறும் குறித்த நபர்களைக் கைது செய்யுமாறும் கோரிக்கை விடுத்தனர். இதனால் அந்த வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

இதன்போது சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பொலிஸார், மக்களுடன் பேச்சுக்களை மேற்கொண்டு மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாட்டைப் பதிவு செய்யுமாறு கோரி இருந்தனர். இந்நிலையில் அந்த மக்கள், மன்னார் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாட்டை மேற்கொண்டனர்.

அண்மையில் இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து பொலிஸார் சிலரைக் கைது செய்து பிணையில் விடுவித்திருந்தனர்.

இந்த நிலையிலே குறித்த இளைஞர் குழு, ஞாயிறு இரவு சாவக்கட்டு கிராமத்திற்குள் சென்று தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

## வலைப்பாடு கடற்கரைச் சூழலைப் பாதுகாக்கும் செயற்பாடு இளைஞர், யுவதிகளால் முன்னெடுப்பு





தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணியால் வலைப்பாடு கடற்கரையை அண்டிய பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற குறித்த துப்புரவு பணியில், சுமார் 30 இளைஞர், யுவதிகள் பங்கேற்றனர்.

கடற்கரைச் சூழலை பாதுகாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நிகழ்வு அடுத்துவரும் நாள்களில் ஏனைய பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

---

## மட்டு. பாலத்திற்குக் கீழ் கைக்குண்டு ஒன்று மீட்பு!

*மட்டக்களப்பு, ஜன.26*

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள வலையிறவு பாலத்தின் கீழ் கைவிடப்பட்ட நிலையில் நேற்று (திங்கட்கிழமை) கைக்குண்டு ஒன்றை மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



மாவட்ட பொலிஸ்விசேட புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான நேற்றுக் காலை குறித்த பகுதியில் கைவிடப் பட்ட நிலையில் இருந்த இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் இதனை நீதிமன்ற அனுமதி பெற்று வெடிக்க வைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

---

## 40 கிராம் ஹெரோயின் பாணந்துறையில் மீட்பு!



பாணந்துறை, பின்னவத்தை பகுதிகளில் சுமார் 40 கிராம் ஹெரோயின் பக்கெட்டுகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைதுசெய்யப்பட் டவர் 35 வயதுடையவர் ஆவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்தக் கைது நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைதான சந்தேக நபரை பாணந்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையுடன், இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு துறைமுக கொடுப்பனவு செயற்பாடுகளும் இணையத்தில்!

கொழும்பு, ஜன.26

கொழும்புதுறைமுகத்தின் அனைத்து இறக்குமதி செயற்பாடுகளுக்குமான கொடுப்பனவுகளை இணையத்தின் ஊடான இலகு கொடுப்பனவு வழிமுறைகளில் செலுத்துவதற்கு இலங்கைத் துறைமுக அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த முறையின் ஊடாக சேவை பெறுநர்கள் தமது வீடுகளில் அல்லது தொழில் நிலையங்களில் இருந்தவாறு துறைமுக கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

துறைமுக அதிகார சபைத் தலைவர் ஜெனரல் தயாரத்நாயக்கவின் ஆலோசனைக்கு அமைய முன்னெடுக்கப்படும் இந்த விசேட திட்டத்தின் கீழ் துறைமுகத்தில் சேவை பெறுநர்கள் இலகுவான முறையில் சிறந்த சேவைகளை வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளனர்.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் கொழும்பு துறைமுகத்தில் உள்ள முனையங்களின் சேவை நடவடிக்கைகள் பாதுகாப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

துறைமுக முனையங்களில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உரிய முகாமைத்துவ திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் சுகாதார வழிமுறைகளுக்கு அமைய துறைமுக சேவை நடவடிக்கைகளை இணையத்தள வழிமுறைகள் ஊடாக உரிய நடவடிக்கை சேவை பெறுநர், சேவை வழங்குநர் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முழுமையான கொள்கலன் களஞ்சியப்படுத்தல், பகுதியளவான கொள்கலன் களஞ்சியப்படுத்தல், வெளியீட்டு முகவர் ஆகிய விடயங்கள் துறைமுக அதிகார சபையின் உத்தியோகபூர்வ இணையத்தள பகுதியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

# சீனாவை நம்பியே அரசாங்கம் ஜெனிவாவை நிராகரிக்கிறது!


என்கிறார் கிரியெல்ல

இலங்கையில் இடம்பெற்றனவாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராயவும், உள்ளக ரீதியில் தீர்வுகளை எட்ட நல்லாட்சி அரசாங்கம் ஆரோக்கியமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததெனவும், 2015 ஆம் ஆண்டு அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியமை இதன் ஆரோக்கியமான முன்னகர்வு என பிரதான எதிர்க்கட்சியின் உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கம் பிரேரணையில் இருந்து வெளியேறினால் இலங்கை பாரிய நெருக்கடியை சந்திக்க நேரிடும் எனவும் அது பொருளாதார தடை வரையில் இலங்கையை கொண்டு செல்லும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராயவும், ஜெனிவா நெருக்கடிகளை சமாளிக்கவும் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை அமைத்துள்ள நிலையில் அதன் நோக்கம் குறித்தும், இலங்கை மீதான ஜெனிவா நெருக்கடிகள் தொடர்பாகவும் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

யுத்த குற்றங்கள் இடம்பெற்றன என தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதில் இராணுவம் ஒட்டுமொத்தமாக இராணுவ குற்றங்களை செய்ததாக நாமும் கூறவில்லை. ஆனால் தனிப்பட்ட ரீதியில் இராணுவத்தில் ஒரு சிலர் குற்றங்களை செய்துள்ளனர். அதற்கான ஆதாரங்கள், நீதிமன்ற விசாரணைகள், சாட்சியங்கள் எனப் பல உள்ளன.

இவ்வாறான நிலையில் ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையை ஏற்றுக் கொள்வதாகவும், உள்ளக ரீதியில் இதற்கான விசாரணைகளை நடத்தி நீதியை நிலைநாட்டுவதாகவும் அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் சர்வதேசத்துக்கு வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அந்த வாக்குறுதிகளின் பிரகாரமே தொடர்ச்சியாக மனித உரிமைகள் பேரவையில் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

நல்லாட்சி அரசாங்கம் புதிதாக பிரேரணையை கொண்டுவந்து இலங்கை இராணுவத்தை போர் குற்றங்களில் சிக்கவைக்கவில்லை, போர் குற்றங்களில் சிக்கவிருந்த இராணுவத்தையும், அதற்கு துணை நின்ற தலைவர்களையும் எமது அரசாங்கத்தில் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக காப்பாற்றியுள்ளோம். 2015 ஆம் ஆண்டு அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணையை நாம் நிராகரிக்காது இணை அனுசரணை வழங்கியதன் மூலமாகவே இலங்கைக்கான சர்வதேச ஒத்துழைப்புக்கள் கிடைக்கப்பெற்றன.

இலங்கைக்குள் தமிழர்களை திருப்திப்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடிந்தது. ஐரோப்பிய நாடுகள் பல எமக்கான உதவிகளை செய்யவும், ஒத்துழைப்புகளை வழங்கவும் தீர்மானம் எடுத்தன. அவற்றின் மூலமாக இலங்கை சர்வதேசத்துடன் நெருக்கத்தை உருவாக்கியது.

ஆனால் ராஜபக்ஷவினரின் அரசாங்கம் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் அவர்களின் பழைய தவறுகளை செய்யத் தயாராகி விட்டனர். 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரேரணையில் இருந்து அரசாங்கம் விலகிக்கொள்வதாக கூறியுள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகள் அதற்கான எதிர்ப்பை வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டனர்.

இந்த நிலைமை தொடருமாயின் இலங்கை தனித்து விடப்படுவதுடன், ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத் தடைகளுக்கும் உள்ளாக நேரிடும். வெறுமனே சீனாவை மாத்திரம் நம்பிக்கொண்டு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் இலங்கையை மிகப்பெரிய நெருக்கடிக்குள் தள்ளப்போகின்றன.

இப்போதும் கூட சீனாவின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே அரசாங்கம் ஜெனிவா விவகாரங்களை நிராகரிக்க தீர்மானம் எடுத்துள்ளது. அதேபோல் அரசாங்கம் தற்போது அமைத்துள்ள ஆணைக்குழு இலங்கைக்கு எந்த விதத்திலும் கைகொடுக்கப்போவதில்லை, இது வெறுமனே கண்துடைப்பு நாடகம் என்பதை சர்வதேசம் நன்கறியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

வெளிநாட்டுக்கு தொழிலுக்குச் செல்ல தாய் மறுப்பு:

# 4 வயது மகனைக் கொலைசெய்து தானும் தற்கொலையுண்ட பெண்!



மத்திய கிழக்கு நாட்டுக்கு தொழிலுக்குச் செல்வதற்கு தாய் அனுமதிக்காதமையால் பெண்ணொருவர் அவரது மகனைக் கொலை செய்து தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார். கந்தர பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

கந்தர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பங்கலாவத்த பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெண்ணொருவரும் அவரது மகனும் சடலமாக மீட்கப்பட்டனர். பங்கலாவத்த பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய பெண்ணொருவரும் 4 வயதுடைய அவரது மகனுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் கணவன் மீன்பிடித் தொழில் ஈடுபடுபவராவார். அவர் சம்பவ தினத்தன்று தொழிலுக்காகக் கடலுக்குச் சென்றுள்ளார். குறித்த பெண் கடிதமொன்றை எழுதி வைத்து விட்டு தனது மகனின் கழுத்தை சேலையால் இறுக்கி கொலை செய்துள்ளமையோடு, அவரும் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதற்காக அந்தப் பெண் மத்திய கிழக்கு நாடொன்றில் சென்று தொழில் புரிவதற்காக தனது தாயிடம் அனுமதி கேட்டுள்ளார். அதற்கு அவரது தாயார் மறுப்பு தெரிவித்தமையாலேயே அவர் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# விளையாட்டு மைதானத்தில் எறிகணைகள் மீட்பு!

போர்க்காலத்தில் புதைக்கப்பட்டவை எனத் தகவல்



முல்லைத்தீவு - முள்ளியவளை பகுதியில் அமைந்துள்ள தேசிய பாடசாலையான வித்தியானந்தா கல்லூரியின் மைதான புனரமைப்பு பணிகளின்போது, போர்க் காலத்தில் புதைக்கப்பட்ட எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த எறிகணைகளை இனங்கண்ட வேலையாள்கள், முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த படையினர், வெடிபொருள் தொடர்பான ஆய்வை மேற்கொண்டுள்ளார்கள்.

மேலும், நீதிமன்ற உத்தரவிற்கு அமைய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, குறித்த வெடிபொருள்களை அகற்ற நடவடிக்கை எடுக்கவுள்ளதாக முள்ளியவளை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# இலங்கை கடற்படையின் உதவியுடன் மீட்கப்பட்டது எம்.வி. யுரோசன் கப்பல்!



அபுதாபியில் இருந்து இலங்கையின் திருகோணமலை துறைமுகம் நோக்கி பயணமாகிய லைபீரியா நாட்டு கப்பலான எம்.வி. யுரோசன் திருகோணமலை துறைமுகத்தில் இருந்து சுமார் 10 கடல் மைல் தொலைவில் உள்ள சின்ன இராவணா கோட்டை கடற்பரப்பில் பாறையொன்றில் மோதிய நிலையில் சிக்குண்டிருந்த நிலையில் இலங்கை கடற்படையினரின் உதவியுடன் கப்பல் மீட்கப்பட்டது.

கப்பலில் சீமெந்து உற்பத்திக்கு பயன்படுத்தும் கிளிங்கர் திரவம் 33 ஆயிரம் தொன்னும், 720 மெற்றிக் தொன் டீசலும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன என முதற்கட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்கு ஆபிரிக்க நாடான லைபீரியா நாட்டுக் கொடியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எம்.வி. யுரோசன் சரக்குக்கப்பல் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி அபுதாபியில் இருந்து சீமெந்துக்கான திரவ பொருள்கள் மற்றும் கட்டுமான பொருள்களுடன் இலங்கையின் திருகோணமலை துறைமுகத்தை நோக்கி பயணமாகியுள்ள நிலையிலேயே கடந்த சனிக்கிழமை நண்பகல் சின்ன இராவணா கோட்டை கடற்பரப்பில் ஆழமற்ற நீரோட்டத்தில் பயணித்த நிலையில் சுண்ணாம்பு பாறைகளில் மோதியதுடன் கப்பலின் கீழ்த் தளம் பாறை ஒன்றில் சிக்குண்டுள்ளத்தை அடுத்து கப்பலை நகர்த்த முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. எனினும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளையில் இலங்கை கடற்படையினர் குறித்த கப்பலை மீட்டு இருந்த இடத்தை விட்டு நகர்த்தியுள்ளனர்.

எம்.வி. யுரோசன் கப்பலில் சீமெந்து உற்பத்திக்கு பயன்படுத்தும் கிளிங்கர் திரவம் 33 ஆயிரம் தொன்னும், 720 மெற்றிக் தொன் டீசலும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவற்றிக்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை என கடற்படை ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். அத்துடன் எம்.வி. யுரோசன் கப்பலை நகர்த்தும் முயற்சியில் கடல் கீழ் மீட்பு முயற்சிகளில் இலங்கை கடற்படையினர் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது கப்பலின் கீழ்ப் பகுதியில் ஒரு பாகம் கற்பாறைகளுக்கு இடையில் சிக்கியுள்ளமை கண்டறிந்துள்ளதுமையுடன் கப்பலின் கீழ்ப் பாகத்தில் ஓரளவு சேதமும் ஏற்பட்டுள்ளதையும் இலங்கை கடற்படையினர் உறுதிப்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

எவ்வாறு இருப்பினும் கப்பலை நகர்த்தும் முயற்சிகளை இலங்கை கடற்படையினர் முன்னெடுத்துவந்த நிலையில் கப்பலை நகர்த்தியுள்ளதாக இலங்கை கடற்படை உறுதிப்படுத்தியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

### ஐ.நா. மனித உரிமை உறுப்பு நாடுகளுக்கு அனுப்பும் ஆவணத்தில்

# அரசியல் கூட்டுத் தலைவர்களின் கையொப்பம் போதும் என்று முன்மொழிந்தவர் கஜேந்திரகுமாரே!

## பங்காளிகள் கொடுத்த அழுத்தத்தை சமாளிக்கவே என்மீது விக்கி பழியைப்போட்டார் என்கிறார் சுமந்திரன்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கான தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் கூட்டில் தயாரிக்கப்பட்ட பொது ஆவணத்தில் அரசியல் கூட்டுக்களின் தலைவர்கள் மாத்திரம் கையொப்பம் இட்டால் போதுமானது என்று வவுனியாவில் வைத்து முன்மொழிந்தவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமே என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனே அந்த ஆவணத்தில் முதலில் கையொப்பமிட வேண்டும் என்று விக்னேஸ்வரனே பிரேரித்தார் என்றும், அதன்படியே கையொப்பங்களை இணையவழியில் பெற்றதாகவும், விக்னேஸ்வரனுக்கு அவரது அணியில் உள்ள பங்காளிக்கட்சிகள் வழங்கிய அழுத்தங்களைத் தவிர்ப்பதற்காக ஏனைய கூட்டுக்களில் இடம்பெற்றுள்ள பங்காளிக்கட்சிகளின் தலைவர்களின் கையொப்பத்தைப் பெறுவதற்குத் தான் தடையாக இருந்தேன் என தன்மீது பழியைப் போட்டுள்ளார் எனவும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். அவர் ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின்போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள பொது ஆவணத்தில் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளின் தலைவர்கள் பிரதிநிதிகளுக்கு கையொப்பம் வழங்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படாமை சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளதோடு, விக்னேஸ்வரன் தமது பங்காளிக்கட்சித் தலைவர்களின் கையொப்பங்களையும் உள்ளீர்க்குமாறு கோரியபோதும் நீங்கள் அதனை செய்யவில்லை என்றும் தெரியவருகின்றதே என்று எழுப்பிய கேள்விகுப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் சம்பந்தமாக நடந்த அனைத்து விடயங்களையும் அவர் பின்வருமாறு விவரிக்கின்றார் –

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள அமர்வில் இலங்கை தொடர்பாகக் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள், அதுபற்றி உறுப்பு நாடுகளிடத்தில் விடுக்கப்படவேண்டிய கோரிக்கைகள், இலங்கையின் பொறுப்புக்கூறலை செய்விப்பதற்கான உபாயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியத் தளத்தில் உள்ள கட்சிகள் சிவில் அமைப்புக்கள், பாதிக்கப்பட்ட தரப்புக்களின் நேரடிப்பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் உள்ளிட்டவர்களை ஒன்றிணைத்து பொதுவான விடயங்களை உள்ளடக்கிய ஆவணமொன்றைத் தயாரிக்கும் முனைப்பில் சிவகரன் தலைமையிலான தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

ஆவணம் இறுதியான தருணத்தில் மின்னஞ்சல் பரிமாற்றத்தில் யார் கையொப்பம் இடுவது என்ற கேள்வி மீண்டும் எழவும், கஜேந்திரகுமார், வவுனியாக் கூட்டத்தில் தீர்மானித்ததன் பிரகாரம் கையொப்பங்களை இடுமாறு மின்னஞ்சலில் குறிப்பிட்டார். அதனை நானும் ஆமோதித்தேன். அதன்போது சம்பந்தன் முதலாவதாக கையொப்பம் இடுகின்றமையைத் தான் விரும்புகிறார் என்று மட்டுமே விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

அன்றையதினமே சம்பந்தனின் கையொப்பத்தைப் பெற்று விக்னேஸ்வரனின் கோரிக்கையை நிறைவு செய்துவிட்டதாக நான் பதில் மின்னஞ்சல் அனுப்பினேன். கஜேந்திரகுமாரும் அன்றைதினமே பின்னிரவில் கையொப்பம் இட்டிருந்தார். மறுநாள் விக்னேஸ்வரன் மட்டுமே கையொப்பமிட வேண்டியிருந்தது. அச்சமயத்தில், விக்னேஸ்வரன் அணியில் உள்ள பங்காளிகள் தாமும் கையொப்பம் இடவேண்டும் என்று அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர் எனத் தகவல்கள் எனக்குக் கிடைத்தன.

நான் நேரடியாக விக்னேஸ்வரனைத் தொடர்பு கொண்டு நான் கேள்விப்படும் விடயங்களைக் குறிப்பிட்டு விக்னேஸ்வரனை கையொப்பம் இடுமாறும் அவ்வாறு பங்காளிக்கட்சிகள் கையொப்பம் இடுவதாக இருந்தால் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளும் கையொப்பம் இடவேண்டியிருக்கும் என்றும் குறிப்பிட்டேன். அத்துடன் மாலை ஆறு மணி வரையிலேயே அனைவரின் கையொப்பத்தைப் பெறுவதற்கான காலம் இருக்கின்றது என்பதையும் அவருக்கு நினைவுபடுத்தியிருந்தேன்.

அவர் எந்தவிதமான பதில்களையும் தெரிவிக்காத நிலையில், தன்னுடைய கையொப்பத்தை மட்டும் மின்னஞ்சல் ஆவணத்தில் இட்டு நண்பகலளவில் அனுப்பி வைத்திருந்தார்.

அந்த மின்னஞ்சல் கிடைத்ததும் மின்னஞ்சல் சங்கிலியில் இருந்த கலாநிதி குருபரன், ஆவணத்தில் கையொப்பம் இட்டமைக்கும் கையொப்பம் இடும் விவகாரத்தை சுமுகமாக தீர்த்து வைத்தமைக்கும் நன்றிகளைத் தெரிவித்து மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

பின்னர் கையொப்ப ஆவணத்தை நான் பரிசோதித்தபோது விக்னேஸ்வரனின் கையொப்பம் சற்று இடம் மாறியிருந்தது. ஆகவே அவரிடத்தில் மீண்டும் கையொப்பம் பெறவேண்டியிருந்தது.

நான் விக்னேஸ்வரனைத் தொடர்பு கொண்டு விடயத்தை விளக்கி மீண்டும் கையொப்பத்தை இடுமாறு கோரியிருந்தேன். இந்தக் காலத்தில் ஏனைய சிவில் அமைப்பினர், திருமலை மாவட்ட ஆயர் உள்ளிட்டவர்களின் கையொப்பங்களும் ஒன்றன் பின்னர் ஒன்றாக வந்தன.

ஆயரின் கையொப்பம் வந்தபோது அதனை எவ்விடத்தில் வைத்து ஒழுங்குபடுத்துவது என்பதில் குழப்பம் ஏற்பட்டது. அதன்போது அனைவரின் கையொப்பங்களுக்கும் ஆசீர்வாதம் அளிக்கும் வகையில் இறுதியாக ஆயரினதும், வேலன் சுவாமிகளினதும் கையொப்பத்தை வைப்போம் என்று முன்மொழிந்தேன். அதனை அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்.

அப்போது நேரம் 5 மணியை எட்டியிருந்தது. விக்னேஸ்வரனின் புதிய கையொப்பம் கிடைக்காமையால் அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவர் அப்போது தான் கையொப்பம் இட்டுள்ளார் எனக் கூறினார். அவருடைய கையொப்பம் 5 மணி 8 நிமிடமளவில் கிடைத்தது.

அவருடைய கையொப்பம் மட்டும் அனுப்பிவைக்கப்பட்ட மின்னஞ்சலில் மேலதிகமாக ஒருவிடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். அதாவது, இறுதி செய்யப்பட்ட ஆவணத்தை அனுப்பிய பின்னர் தன்னுடைய கோவையில் வைப்பதற்காக ஒரு பிரதியை அனுப்பி வைக்குமாறே கோரியிருந்தார்.

இறுதியாக ஆறுமணிக்கு சற்றே தாமதமாக வேலன் சுவாமிகளின் கையொப்பம் வந்திருந்தது. அவர் வெளியிடத்திற்குச் சென்று திரும்புவதற்கு தாமதமாகியதாக காரணம் கூறப்பட்டமையோடு அதனை இணைத்துக் கொள்ளுமாறு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கோரியிருந்தனர்.

அதன்பிரகாரம் அக்கையொப்பத்தையும் இணைத்து, உறுப்பு நாடுகளுக்கு அனுப்பும் செயற்பாட்டை ஆரம்பித்துவிட்டேன். நள்ளிரவை அண்மித்திருந்த நிலையில் 47 நாடுகளுக்குமான மின்னஞ்சலை அனுப்பி விட்டு இறுதியாக எனது உட்பெட்டியைப் பார்த்தபோது 7.20 மணியளவில் விக்னேஸ்வரன் தன்னுடைய பங்காளிக் கட்சித் தலைவர்களினது கையொப்பங்களுடனான ஆவணத்தை அனுப்பி வைத்திருந்தார்.

அதில் எந்தவிதமான குறிப்புக்களும் இட்டிருக்கவில்லை. ஆகக்குறைந்தது தமது தரப்பு கையொப்ப ஆவணம் இதுதான் என்று கூட எழுதப்பட்டிருக்கவில்லை. ஆகவே, ஏற்கனவே அனுப்பிய ஆவணத்துக்கு அவர்களும் இணக்கம் வெளியிட்டுள்ளார்கள் போல் உள்ளது என்று கருத்தியமையோடு நேரம் நள்ளிரவாகியிருந்தமையால் அவரை நான் தொடர்பு கொண்டிருக்கவில்லை.

இதுதான் நடந்தது. நான் அன்றையதினம் மாலையில் இரண்டாவது தடவையாக கையொப்பம் கோரி அழைப்பெடுத்தபோது அவருடைய பங்காளிக்கட்சிகளின் பிரதிநிதிகளும் விக்னேஸ்வரனின் வீட்டில் இருந்தனர் என எனக்குப் பின்னர் தகவல்கள் கிடைத்திருந்தன. ஆகவே, அவருடைய பங்காளிக்கட்சிகளையும் வைத்துக் கொண்டு தான் அவர் தனித்து கையொப்பமிட்டு அனுப்பி விட்டு தற்போது நெருக்கடிகள் அவருடைய கூட்டுக்குள் ஏற்பட்டவுடன் என்மீது பழியைப் போடுகின்றார்.

அதற்காக அவருடைய பங்காளிக்கட்சிகளின் தலைவர்களையும் இணைத்ததாக தமது பங்காளிக்கட்சித் தலைவர்களின் கையொப்பங்களை ஏன் இணைக்கவில்லை என்று கேள்வி எழுப்பி எனக்கொரு மின்னஞ்சல் அனுப்பி நிலைமைகளை சுமுகமாக்க முனைந்திருந்தார். அதன்போது உங்களுக்கு கூறிய மேற்படி விளக்கத்தை அவருக்கு அளித்துள்ளேன்.

அதுமட்டுமன்றி அவரது அணிக்குள் இருக்கும் பிரச்சினைத் தீர்க்கமுடியாத நிலையில், என்னுடைய தலையில் அனைத்துப்பழிகளையும் சுமத்த விளைந்தால் மின்னஞ்சலை முழுமையாகப் பகிரங்கப்படுத்துவேன் என்பதையும் அவருக்கு நேரடியாகவே கூறியுள்ளேன். – என்றார்.

# அலுவலக சேவை ரயில்களில் ஒரு மீற்றர் இடைவெளி கட்டாயம்!

ரயில் சேவையைப் பயன்படுத்தும் பயணிகள் தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அரச மற்றும் தனியார் துறையினரது சேவை நேரத்தை மாற்றியமைத்தால் ரயில் சேவையில் சமூக இடைவெளியை பேண முடியும். அதனை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும் என ரயில்வேத் திணைக்கள பொது முகாமையாளர் டிலந்த பிரனாந்து தெரிவித்தார்.

பொதுப் போக்குவரத்து சேவையில் பயணிகள் நெருக்கமாகப் பயணம் செய்யும் போது கொவிட் - 19 வைரஸ் தொற்று தீவிரமாகப் பரவும் அபாய நிலை காணப்படுவதாக சுகாதாரத் தரப்பினர் குறிப்பிட்டுள்ள விடயம் தொடர் வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் தெரிவித்த அவர் -

பொதுப்போக்குவரத்து சேவையின் ஊடாக கொவிட் - 19 வைரஸ் தொற்று பரவலடையும் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ரயில் சேவை பாதுகாப்பான முறையில் தற்போது போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது. ரயில் திணைக்களத்தில் காணப்படும் வளங்களை அடிப்படையாகக் கொண்டு பாதுகாப்பு வழிமுறைகளை செயற்படுத்த முடியும்.

ஒரு ரயில் சேவையில் ஈடுபட முன்னரும், சேவையில் ஈடுப்பட்ட பின்னரும் கிருமி தொற்று நீக்கங்களுக்கு உட்படுத்தப்படுகிறது. ரயில் நிலையங்களுக்கு பிரவேசிக்கும் போது முகக்கவசம் அணிதல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. சுகாதாரத் தரப்பினர் வலியுறுத்தியுள்ள சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை இயலுமானளவில் செயற்படுத்தியுள்ளோம். - என்றார்.

ஒரு மீற்றர் சமூக இடைவெளியை பேணுவது தொற்றைக் கட்டுப்படுத்தும் பிரதான பாதுகாப்பு அறிவுறுத்தலாக குறிப்பிடப்பட்டுள்ளது. சமூக இடைவெளியை ரயில் சேவையில் குறிப்பாக காலை, மாலை அலுவலக ரயில் சேவையில் கடைப்பிடிப்பது சாத்தியமற்றதாக உள்ளது. இது அச்சுறுத்தலான தன்மையாகவே காணப்படுகிறது. - என்றார்.

# இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பாகப் பிரித்தானியா கவலை!

**கொரோனாத் தொற்று உறுதியாகி உயிரிழப்பவர்களைக் கட்டாயமாகத் தகனம் செய்கின்றமை உட்பட, இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் பிரித்தானியா கவலை வெளியிட்டுள்ளது.**

**இந்த விடயம் தொடர்பான ஐ.நா. அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்பட உள்ளதாக பிரித்தானிய உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவித்துள்ளார்.**

**இது தொடர்பாக டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள அவர், குறித்த அறிக்கையில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் அணுகுமுறை தொடர்பாகவும் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.**

# இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தை விடவும் ஜனநாயக விடயங்களில் பைடன் அரசு அக்கறை!

## கலாநிதி தயான் ஜயதிலக தெரிவிப்பு



அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ள ஜோ பைடன் தலைமையிலான நிர்வாகம் இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தை விடவும் ஜன நாயக விழுமியங்கள், மனித உரிமை விவ காரங்கள், சமத்துவம், சுயாதீன நீதித்துறை, சமூக குணாம்சங்கள் உள்ளிட்டவற்றிலேயே அதீதமான கரிசனைகளைக் கொண்டிருக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் சர்வதேச உறவுகள் தொடர்பான மூத்த ஆலோசகரும், இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

2019 ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கையில் ஜனநாயகம், மனித உரிமைகள், சமத்துவம், சுயாதீன நீதித்துறை உள்ளிட்ட அனைத்துக் கட்டமைப்புக்களிலும் விமர்சனங்களுக்குரிய சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இதனை விடவும், அரசாங்கத்தில் உள்ள அமைச்சர் ஒருவர் சாதாரண பிரஜைகளுக்கு இராணுவப்பயிற்சி அளிப்பதற்கான பரிந்துரையை செய்திருக்கின்றார். ஜனநாயகம், மனித உரிமைகள் விடயத்தில் வெளிப்படைத் தன்மையுடன் மீண்டெழ வேண்டிய நிலையில் இருக்கும் இலங்கையில் இராணுவப்பயிற்சிக்கான யோசனையை முன்வைப்பது ஆபத்துக்கள் நிறைந்ததாக உள்ளது.

ஏற்கனவே நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்றுள்ளவரும், அவரைச் சூழ்ந்துள்ளவர்களும் இராணுவப் பின்னணியைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் உள்ளீர்ப்புக்கள் விமர்சிக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் அமெரிக்காவில் விடைபெற்றுச் சென்ற ரொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்திற்கு முற்றிலும் எதிரான போக்குடையதாகவே பைடனின் நிர்வாகம் அமையப்போகின்றது. இலங்கையின் ஆட்சியாளர்கள் ட்ரம்ப் வாதிகளாகவே இருக்கின்றனர். அவருடைய செயற்பாடுகளை ஒத்த சில நிகழ்வுகள் இங்கும் நடைபெற்றிருக்கின்றன.

இலங்கையின் ஆட்சியாளர்களும் முழுமையான அதிகாரம் தமது கைகளில் உள்ளது என்ற அடிப்படையிலேயே சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் பிரதிபலிப்புக்களைச் செய்கின்றார்கள். மிருசுவில் படுகொலையில் குற்றவாளியாக காணப்பட்டவருக்கு பொதுமன்னிப்பளித்தமை முதல் பல விடயங்களை உதாரணமாகக் கூற முடியும்.

ஆகவே, அமெ. ஜனாதிபதி பைடன், துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ், இராஜாங்க செயலாளராக நியமிக்கப்படவுள்ள அன் டனி பிளிங்டன், பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள லொயிட் அவுஸ்ரின் உள்ளிட்டவர்கள் ஜனநாயகம் தொடர்பில் அதீத கரிசனை உடையவர்கள்.

அவர்கள் மீண்டும் உலக நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை மேம்படுத்த முனையும் போது ஜனநாயகம் உள்ளிட்ட இதர விடயங்கள் தொடர்பில் குறைபாடுகளைக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு நேரடியாகவே சுட்டிக்காட்டத் தயங்கமாட்டார்கள். ஜனநாயகத்தை மனித உரிமை விடயங்களை வலுவிழக்கச் செய்வதற்கும் இடமளிக்க மாட்டார்கள்.

அதேநேரம், தற்போது ஆட்சியில் உள்ள அரசியல் கட்சி, சீனாவுடன் வர்த்தக உறவுகளைக் கடந்ததோர் உறவைப் பேணுவதற்கு முற்படுகின்றது. குறிப்பாக சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் பொதுஜன பெரமுனவும் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் 2021ஆம் ஆண்டுக்கான சீனத் தூதுவரின் வாழ்த்துச் செய்தியில் ஒரேபட்டி ஒரே மண்டலம் முன்முயற்சி திட்டம் இலங்கை ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளீர்க்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. இவை சீனாவுடன் இருதரப்பு உறவுகளைத் தாண்டியதொரு பந்தத்தைக் கொண்டிருப்பதை வெளிப்படுத்துகின்றன. ஆகவே, பூகோள அரசியலில் அமெரிக்க இந்த விடயங்கள் தொடர்பில் கவனத்தில் கொள்கின்றபோது, ஜனநாயகம், மனித உரிமைகள் விடயங்களில் இறுக்கமான நிலைப்பாடுகளை எடுக்கலாம். - என்றார்.

# இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு 9 சிறைக் கைதிகள் இதுவரை சாவு!

## சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் தகவல்

சிறைச்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் தொகை 9 ஆக அதிகரித்துள்ளதாக, சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சிறைச்சாலைகளில் கொரோனா தொற்றுக்குள்ளாகுபவர்களின் வீழ்ச்சியடைந்து வருகின்ற நிலையிலும், புதிதாக ஒரு மரணம் பதிவாகியுள்ளது.

காலி சிறைச்சாலை கைதியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். எனினும் கடந்த ஞாயிற்றுக் கிழமை புதிதாக 10 தொற்றாளர்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இவர்களுள் 9 பேர் தனிமைப்படுத்தப்பட்டிருந்த விளக்கமறியல் கைதிகளாவர். மற்றையவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்த சிறைக்கைதியாவார்.

இந்நிலையில் வைரஸ் தொற்று உறுதிச் செய்யப்பட்ட நிலையில் 5 அதிகாரிகள் உட்பட 138 பேரே இது வரையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்வாறு சிகிச்சைப் பெற்றுவந்தவர்களில் 129 சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 4 ஆயிரத்து 105 பேர் குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, வைரஸ் பரவல் காரணமாக சிறைச்சாலைகளில் 4 ஆயிரத்து 388 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அதற்கமைய 134 சிறைச்சாலை அதிகாரிகள், 489 ஆண் சிறைக் கைதிகள், 11 பெண் சிறைக் கைதிகள், 3 ஆயிரத்து 520 ஆண் விளக்கமறியல் கைதிகள் , 234 பெண் விளக்கமறியல் கைதிகளுமே இவ்வாறு தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். - என்றார்.

# பொலிஸ் போதைப் பொருள் பணியத்தின் அதிகாரியை கைதுசெய்ய சிவப்பு அறிவிப்பு

பொலிஸ் போதைப்பொருள் பணியத்தின் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட போதைப்பொருள் வழக்கின் 14 ஆவது சந்தேக நபரான உதார சம்பத்தை இன்டர்போல் உதவியினூடாக கைதுசெய்ய நீதிமன்றம் சிவப்பு அறிவித்தல் பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவை கொழும்பு தலைமை நீதிவான் மொஹமட் மிஹெய்ல் நேற்று (திங்கட் கிழமை) காலை பிறப்பித்தார்.

சட்டமா அதிபரை பிரதிநிதித்துவப்படுத்தும் துணை சொலிசிட்டர் ஜெனரல் திலீபா பீரிஸ் 14 ஆவது சந்தேக நபர் போலி கடவுச் சீட்டைப் பயன்படுத்தி நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தினார்.

அதன்படி அவரை சர்வதேச பொலிஸான இன்டர்போலின் உதவியுடன் கைதுசெய்யவே நீதிமன்றம் சிவப்பு அறிவித்தலைப் பிறப்பித்தது.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருள்களை, போதைப்பொருள் கடத்தற்காரர்களுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில்கைதானபொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் 13 அதிகாரிகள் உட்பட 16 நபர்களுக்கான விளக்கமறியல் பெப்ரவரி 02 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்டி மாநகரசபைக்கு உட்பட்ட 3 பாடசாலைகளில் தொற்றாளர்

கண்டி மாநகரசபையை அண்மித்த பகுதிகளிலுள்ள 3 பாடசாலைகளில் 3 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட பாடசாலைகள் அனைத்தும் முழுமையாக கிருமி நீக்கப்பட்டுள்ளன எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

கண்டி மாநகர சபையை அண்மித்த பகுதிகளிலுள்ள 3 பாடசாலைகளில் கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று பாடசாலைகளில் ஒவ்வொருவர் என்ற அடிப்படையில் 3 பேருக்கு மாத்திரமே தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களுடன் தொடர்புகளைப் பேணியோர் இனங்காணப்பட்டு தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

அத்தோடு குறித்த பாடசாலைகளில் தொற்று நீக்கல் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவே பெற்றோர் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

கண்டி மாநகரசபைக்கு உட்பட்ட பாடசாலைகளில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட சகல பாடசாலைகளையும் தூய்மைப்படுத்தி முழுமையாகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளோம்.

அதேவேளை, எதிர்வரும் நாள்களில் தொற்றாளர்கள் இனங்காணப்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளனவா என்பது தொடர்பிலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.


இதற்கான நடவடிக்கைகள் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. - என்றார்.




## தினம் ஒரு விவசாயத் தகவல்

### குறைந்த முதலீட்டில் இலாபம் தரும் பாக்குச் செய்கை





பருவ மழை பெய்யும் காலத்தில் மரங்களை நடுவது சிறப்பாகும். களத்தை தயார் செய்ததன் பின்னர் மேல் மண், மாட்டுச் சாணம் அல்லது சேதனப் பசளைகளைக் கொண்டு நிரப்பப்பட்ட 45cm x 45cm x 45cm அளவில் ஆன குழிகளில் இளம் கன்றுகளை ஸ்தாபகம் செய்யலாம். மேலதிக நீரை அகற்றுவதற்காக வடிகால் வசதிகள் அமைத்தல் வேண்டும். சரிவான நிலங்களில் நடுகின்ற போது விளிம்புகளில் நடுவது சிறந்தது என பரிந்துரைக்கப்படுகின்றது. சிறந்த வளர்ச்சிக்கு சேதன பசளை பிரயோகம் முக்கியமாகும்.

இடைவெளி - கலப்புச் செய்கையின் நிமித்தம் 3.0m x 3.0m (1,100 தாவரம்/ஹெ.) - 5.4m x 5.4m இடைவெளியில் வாழைச் செய்கை மேற்கொள்ளப்படலாம்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# சஜித் கட்சியில் முக்கிய பதவி பெற்றார் உமாசந்திரா பிரகாஷ்



கொழும்பு. ஜன. 25

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளராக உமா சந்திரா பிரகாஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய யாப்பின் பிரகாரம் கட்சியின் முதலாவது மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போதே கட்சித் தலைவரால் உமாசந்திரா பிரகாஷுக்கு பிரதி செயலாளர் பதவிக்கான நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டது. உமா, கட்சியின் மத்திய செயற்குழுவுக்கும் உள்வாங்கப்பட்டுள்ளார்.

# சுரேஷ் பிறேமசந்திரன் ஓர் அரசியல் விபச்சாரி!

## கஜேந்திரகுமார் காட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம். ஜன. 25

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலை வரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்ட ணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் பிறேமச் சந்திரன் ஓர் அரசியல் விபச்சாரி என தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணி யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந் திரகுமார் பொன்னம்பலம் காட்டமாக விமர் சித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந் துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போது எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக் கையிலையே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின் போது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஜெனிவா அமர்விற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன் வைத்த வரைவில் இனப்படுகொலை என்ற வசனத்தை உள்ளடக்கவில்லை மற்றும் சர்வஜன வாக்கெடுப்பை கஜேந்திரகுமார் விரும்பவில்லை என்பது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுரேஷ் பிறேமச்சந்திரன் முன்வைத்திருந்தார்.

இந்நிலையில் இன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நடத்திய ஊடக சந்திப்பின் போது சுரேஷ் பிறேமச்சந்திரனின் மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டன.

அந்தக் குற்றச்சாட்டுக்களை கஜேந்திரகுமார் நிராகரித்தார். அதுமட்டுமல்லாமல் சுரேஷ் பிறேமச்சந்திரன் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் அவர் அடுக்கினார்.

அப்போதே அவர் 'அரசியல் விபச்சாரி' என சுரேஷ் பிறேமச்சந்திரனை கடுமையாக வைதார்.



ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட சுரேஷ் பிறேமச்சந்திரன், பின்னர் அதற்கு எதிராகத் திரும்பி, இந்தியப் படையுடனும் அதற்குப் பின்னர் இலங்கைப் படையுடனும் சேர்ந்து செயற்பட்டவர். அதன் பின்பு மஹிந்த ராஜபக்ஷவின் கடற்றொழில் அமைச்சில் ஆலோசகராகப் பதவி வகித்தவர். அதன் பின்பு மன்னிப்பு அளிக்கப்பட்டு, கூட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டார். அங்கும் கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டே புலிகளுக்குக் காலைவாரி அவர்களை அழிப்பதற்குத் துணை போனார். அதன் பின்னர் கூட்டமைப்பையே குழப்பினார். இப்போது தமிழ் மக்கள் கூட்டணியைக் குழப்புகின்றார்.

இப்படி அரசியலில் மாறி மாறி குத்துக் கரணம் அடித்து அவர் தம்மை ஓர் அரசியல் விபச்சாரியாகவே அடையாளம் காட்டி வந்துள்ளார். - என்ற சாரப்பட கருத்துக் கூறினார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

# லொறி பின் சில்லில் சிக்கி மோ. சைக்கிள் பயணி பலி

## மட்டு. – திருமலை வீதியில் சம்பவம்



திருகோணமலை. ஜன.25

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் பச்சிலை சந்தியில் இன்று சிமெந்து லொறியில்மோதுண்டு 65 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் மரணமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த - மூதூரை சேர்ந்த - 65 வயதுடைய சித்திக் என்ற நபரே அவரை முந்திசெல்ல முயன்ற சிமெந்து லொறியின் பின் சக்கரத்தில் சிக்குண்டு அந்த இடத்திலேயே பலியானார் என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர் .

சம்பவம் இடம்பெற்ற பச்சிலைசந்திக்கு விரைந்த மூதூர் பொலிஸார்லொறியின் சாரதியை கைதுசெய்து மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒத்திவைப்புச் சிறையுடன் 3 தமிழக மீனவர் விடுவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , ஜன .25

இந்தியாவின் தஞ்சாவூர் மாவட்ட மீனவர்கள் 3 பேரும் மல்லாகம் நீதிமன்றால் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாதங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

ஜனவரி மாதம் 5 ஆம் திகதி தஞ்சாவூர் மாவட்டம் கள்ளிவயல் மீன் பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க புறப்பட்ட சக்திவேல்,பாலமுருகன்,மணிபாலா ஆகிய 3 மீனவர்கள் இலங்கை யாழ்பாணம் வடமராட்சி, தொண்டைமானாறு கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அந்த பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த கடற்படையினரால் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு காரைநகர் கடற்படைமுகாமில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்த 3 மீனவர்களின் வழக்கும் மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி அலெக்ஷ் ராஜா கிரேஸின் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது மூன்று மீனவருக்கும் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறிநுழைந்து மீன்பிடித்த குற்றத்திற்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாதங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும் விசைபடகின் உரிமையாளரை வரும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி படகின் உரிய ஆவணங்களுடன் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும், தவறும் பட்சத்தில் மீன்பிடி விசை படகு இலங்கையின் வெளிநாட்டு மீன்பிடி சட்டத்தின் கீழ் அரசுடமையாக்கப்படும் எனவும் நீதிபதி தீர்ப்பளித்தார்

இதனையடுத்துமீனவர்கள் அனைவரும் யாழ்பாணம் மாவட்டம் சிறைக்கட்டுப் பாட்டுக்குகீழ்உள்ளசிறப்புமுகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் ஓரிரு நாள்களில் விமானம் அல்லது கடல் வழியாக இந்தியா திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எதிராக யாழ் நகரில் கவனவீர்ப்புப் போராட்டம்




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம். ஜன. 25

யாழ் சிவில் சமூகம் என்ற பெயரிலான ஏற்பாட்டில் யாழ் நகரில் இன்றைய தினம் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எதிராக கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

எதிர்வரும் மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழ் கட்சிகள் பக்கச் சார்பாக செயற்பட்டு வருகின்றன எனவும் -

குறிப்பாக, தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல், கொலை விடயங்களும் ஜெனிவாவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவது அவசியம் எனக் கட்டாயமாகச் சுட்டிக் காட்டப்பட வேண்டும் எனவும் -

எனினும், அந்த விடயம் தொடர்பில் தமிழ் கட்சிகள் எந்தவித கரிசனையும் செலுத்துவது இல்லை எனவும் -

எனவே இந்த நாட்டில் தமிழ் கட்சிகள் ஜனநாயக ரீதியாக செயல்படவில்லை எனவும் -

தெரிவித்து, ஆதலால் தமிழ் கட்சிகள் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றன எனக் குற்றம் சாட்டியும். அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# 27 நாள்கள் தனிமைப்படுத்தலின் பின்னர் வழமைக்குத் திரும்பியது கல்முனை நகர்

( ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட கல்முனை நகரின் செய்லான் வீதி தொடக்கம் கல்முனை வாடிவீட்டு வீதி வரைக்குமான 11 கிராம சேவையாளர் பிரிவுகள் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருந்தன.

தற்போது 27 நாள்களின் பின்னர் நேற்று (24 ஆம் திகதி மாலை 06மணி முதல் இப்பிரதேசம் தனிமைப்படுத்தல் முடக்க நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது சுகாதார பிரிவினரின் அறிவித்தலுக்கமைய இந்த தகவலை தகவல் திணைக்களம் இன்று வெளியிட்டுள்ளது.



இதனைத் தொடர்ந்து தனிமைப்படுத்தல் நிலையிலிருந்து வழமைக்குதிரும்பிய கல்முனை நகரத்தில் வர்த்தகர்கள் தமது கடைகளை திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பொதுமக்கள்சுகாதாரவிதிமுறைகளுக்கமையபொருள்கள் கொள் வனவு செய்தனர்.

பொதுச் சந்தை, போக்குவரத்து மற்றும் அலுவலகங்கள் மற்றும் பிரதான பஸ் நிலையம் என்பன வழமையான நிலையில் இயங்குகின்றமையையும் அவதானிக்க முடிந்தது. எனினும் பொது மக்களின் வருகை குறைந்திருந்ததையும் காணக் கூடியதாக இருந்தது.

தொடர்ந்தும் கொரோனா தொற்று பரவுவதை தடுப்பதற்காக சுகாதார நடை முறைகளை பொது மக்கள் கடைப்பிடிப்பது அவசியமாகும் என்றும் சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

# பி.சி.ஆருக்கு ஒத்துழைக்காமையால் வாகன சுத்திகரிப்பு நிலையம் சீல்!

பி.சி.ஆர். பரிசோதனையை புறக்கணித்தமையால் வாகன சுத்திகரிப்புநிலையத்துக்கு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் சீல் வைக்கப்பட்டது.

அந்தப் பிரதேசத்திலுள்ள அதிக ஆபத்துநிலைக்குரியவர்களை இனங்கண்டு அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் வர்த்தகர்கள், சாரதிகள், வாகன சுத்திகரிப்புநிலைய ஊழியர்கள் மற்றும் அதிஆபத்து பிரதேசங்களிலிருந்து திரும்புவோர் என முன்னிலைப்படுத்தப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைக்காக குறித்த வாகன சுத்திகரிப்பு நிலைய ஊழியர்கள் அழைக்கப்பட்டிருந்தபோதிலும் அவர்கள் பரிசோத னைக்கு சமுகமளிக்கவில்லை.

இதுதொடர்பாக பொது சுகாதார பரிசோதர்கள் அவ்விடம் சென்று பரிசோதித்த போது அதன் உரிமையாளர் ஒத்துழைக்கவில்லை என்று பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

எதிர்வரும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்பட்டு முடிவுகள் கிடைக்கும் வரை அந்த நிறுவன செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தி சீல் வைக்கப்பட்டது. அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த நீண்ட தூர பயணங்களில் ஈடுபடும் பஸ்களின் சாரதி மற்றும் நடத்துனரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த பணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசிகளை வழங்குவதில் விஷேட சலுகைகள் இல்லை!

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன உத்தரவாதம்



கொவிட் தடுப்பூசிகளை வழங்குவதற்கு சுகாதார அமைச்சால் ஒழுங்குமுறையொன்று திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு அப்பால் சென்று தனவந்தர்களுக்கோ அல்லது அதிகாரமுடையவர்களுக்கோ விஷேட சலுகைகள் எவையும் வழங்கப்பட மாட்டாது என்று ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

உலகின் பல நாடுகளிலும் தயாரிக்கப்பட்ட கொவிட் தடுப்பு மருந்துகளில் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரசெனிகா தடுப்பு மருந்தே பக்க விளைவுகள் மிகக் குறைவானதாகும்.

மில்லியனில் ஒருவருக்கே இதன் மூலம் பக்க விளைவு ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த தடுப்பூசி மூலம் பாரிய பக்க விளைவுகள் ஏற்படக் கூடும் என்று யாரும் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இலங்கையில் கொவிட் தடுப்பூசி வழங்குவதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துகையில் இதனைக் கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில் –

18 வயதுக்கு மேற்பட்டோருக்கே தடுப்பூசி வழங்கப்படும். இலங்கையில் மொத்த சனத்தொகையில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமானோர் 18 வயதுக்கு மேற்பட்டோராவர். அதற்கமையவே 65 வீதமானோருக்கு தடுப்பூசி வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

முதற்கட்டமாக வைத்தியர்கள் , தாதியர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்டோருக்கும், இரண்டாம் கட்டமாக முப்படையினர் மற்றும் பொலிஸாருக் கும் , மூன்றாம் கட்டமாக 65 வயதுக்கு மேற்பட்ட தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு திட்டமிட்டுள்ள ஒழுங்கு விதிமுறைகளை மீறி யாருக்கும் தடுப்பூசி வழங்கப்பட மாட்டாது. அதாவது பணத்தை வழங்குபவர்களுக்கோ அதிகாரத்திலுள்ளவர்களுக்கோ தடுப்பூசி வழங்குவதில் எந்த சலுகையும் வழங்கப்படமாட்டாது.

இந்தியாவைத் தொடர்ந்து சீனா மற்றும் ரஷ்யாவிலிருந்து தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்கான இராஜதந்திரமட்டத்தில் பேச்சுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்தோடு உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஊடாகவும் மொத்த சனத்தொகையில் 20 வீதமானோருக்கும் தடுப்பூசி இலவசமாக வழங்கப்படும். இவற்றின் பின்னர் பற்றாக்குறை ஏற்படும்பட்சத்தில் அதனை பணம் கொடுத்து கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

உலகின் பல நாடுகளிலும் தயாரிக்கப்பட்ட கொவிட் தடுப்பு மருந்துகளில் ஒக்ஸ்போர்ட் தடுப்பு மருந்து பக்க விளைவுகள் குறைவானதாகும்.

இது வரையில் வழங்கப்பட்டுள்ள ஒக்ஸ்போர்ட் தடுப்பு மருந்தால் பாரிய பக்க விளைவுகள் எவையும் ஏற்படவில்லை. எனினும் மயக்கமடைதல் உள்ளிட்ட ஏதேனுமொரு பக்க விளைவு ஏற்பட்டால் அதற்கு முகங்கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் சர்வதே மதிப்பீட்டின்படி மில்லியனுக்கு ஒன்று அல்லது இரண்டு என்ற அடிப்படையிலேயே இவ்வாறு பக்க விளைவுகள் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பாக வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை. கொரோனா வைரஸ் மற்றும் அண்மையில் உருவாகிய உருமாறிய வைரஸ் என்பவற்றுக்கு ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி ஈடுகொடுக்கக் கூடியது என நிரூபிக்கப்பட்டுள்ளது. – என்றார்.

# இந்தியாவின் குடியரசு தினத்தில் தூதரகத்தில் கொடியேற்றல்!

இந்தியாவின் 72 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு, இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 8.45 மணிக்கு 14, மருதடி வீதியில் அமைந்துள்ள தூதரகத்தில் இந்திய தேசியக் கொடி ஏற்றும் நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் அனைத்து இந்திய குடிமக்களையும், இந்திய வழ்சாவழியினரையும், நலன்விரும்பிகளையும் கலந்து கொள்ளுமாறு துணைத் தூதரகம் அறிவித்துள்ளது.

அதேநேரம், நிகழ்வில் பங்குபற்றுபவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதுடன், முகக் கவசம் அணிந்து, சமூக இடைவெளியைப் பேணி கொவிட் நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் தூதரகம் விடுத்த செய்திக்குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழில் அபிவிருத்திகளை மேற்கொள்ள எம்.பிக்களிடம் முன்மொழிவு கோரல்!

## மாவட்ட செயலர் தெரிவிப்பு



2021 வரவு – செலவுத் திட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு குறித்து ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன என யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில் –

2021 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான முன்மொழிவுகள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரப்பட்டுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடாக மார்ச் மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதனால், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ள நிலையில், அதற்கமைய அவர்கள் தமது முன்மொழிகளைச் சமர்ப்பிக்க முடியும்.– என்று குறிப்பிட்டார்.

# இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பு பணிகள் ஆரம்பமாகியுள்ளன!

நாடளாவிய ரீதியில் இருக்கின்ற சகல பாதுகாப்பு படைத் தலைமையகங்களுக்கும் பிரதேச செயலக மட்டத்திலிருந்து ஆட்சேர்ப்பு செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஜனவரி – மார்ச் மாதம் வரையில் இந்த ஆட்சேர்ப்பு திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதுடன், வர்த்தக மற்றும் பொதுச்சேவை பிரிவுகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பவே மேற்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரிவுகளில் இணைந்துக் கொள்ள விரும்பும் தேக ஆரோக்கியமான ஆற்றல் மிக்க இளைஞர் பாதுகாப்பு படைத் தலைமையகங்களுடன் தொடர்புகொள்ள முடியும்.

மேலும் ஆட்சேர்ப்பு பணிப்பகத்தால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வன்னி, மத்திய, கிழக்கு பகுதிகளில் இருக்கின்ற பாதுகாப்பு படைத் தலைமையக மட்டங்களில் 2020, 22 – 31 ஆம் திகதிகளில் ஆட்சேர்ப்பு பணிகளுக்கான தொடர் விழிப்புணர்வு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவதுடன் மேற்படி ஒவ்வொரு பாதுகாப்பு படைத்தலைமையகங்களில் பிரிகேட் படைப் பிரிவு தளபதியின் தலைமையில் பிரிகேடியர் பொது பதவி நிலை அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் இந்த பணிகள் முன்னெடுக்கப்படுள்ளன.

அதன்பிரகாரம், பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டலின் கீழ், இராணுவ ஆள்சேர்ப்பு பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் ஏ.ஏ.டி.என்.எஸ்.பி. துனுவில மற்றும் ஆட்சேர்ப்பு பிரிவின் பதவி நிலை அதிகாரி – 1 லெப்டினன் கேணல் எம்.எல்.டி.மொல்லிகொட ஆகியோரின் தலைமையில் ஆள்சேர்ப்பு பணிகள் இடம்பெற உள்ள நிலையில் ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் குறைந்தபட்சம் மூன்று இளைஞர்கள் இராணுவத்துக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

எனவே, இராணுவத்தில் இணைந்து கொள்ள விரும்புவோர் அருகிலுள்ள பாதுகாப்பு படைத் தலைமையகத்தைத் தொடர்பு கொண்டு வயதெல்லை, கல்வித் தகைமை என்பவற்றைத் தெரியப்படுத்தி, சம்பள விவரம், சலுகைக் கொடுப்பனவுகள், மருத்துவ சலுகைகள் உள்ளிட்ட விடயங்கள் பற்றி அறிந்துகொள்ள முடியும்.

அல்லது அருகிலுள்ள இராணுவ படைப் பிரிவிற்கு நேரடியாக சென்று அங்கு ஆள்சேர்ப்புக்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரிகளைச் சந்தித்து மேலதிக தகவல்களை அறிந்துகொள்ளவும் முடியும்.

தொடர்புகளுக்கு:

தலைமையகம் – யாழ்ப்பாணம் – 011 4056102/ 076 5303715

தலைமையகம் – வன்னி (வவுனியா) – 076 6907293

தலைமையகம் – கிழக்கு (வெலிகந்த) – 027 2259128/ 076 6907297

தலைமையகம் – கிளிநொச்சி – 076 4514395 / 070 1918333

தலைமையகம் – முல்லைத்தீவு – 071 2138268

தலைமையகம் – மேற்கு (பனாகொடை) – 076 5303721

தலைமையகம் – மத்திய (தியதலாவை) –076 6907304/0765303719

பணிப்பாளர் – ஆள்சேர்ப்பு பிரிவு (கொஹுவலை) –011 2815080 / 011 3137553

# கடற்படையிடமிருந்து காணியை பெற்றுத்தரக் கோரி மனித உரிமை ஆணைக்குழுவில் மக்கள் முறைப்பாடு

*கடற்படையிடமிருந்து காணியை பெற்றுத்தரக் கோரி தீவக மக்கள், மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளனர்.*

*யாழ்ப்பாணம் - வேலணை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஜே 11 மண்கும்பான், 5 ஆம் வட்டாரத்திலுள்ள தீவகத்தில், கடற்படைக்கான பிரதான முகாம் அமைந்துள்ளது.*

*அவை பொதுமக்களுக்கு சொந்தமான காணியாகும். எனவே குறித்த 15 ஏக்கர் காணியை விடுவிக்குமாறு கோரி, நேற்று (திங்கட்கிழமை) காணி உரிமையாளர்களால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*கடந்த 30 வருட காலமாக தனியாருக்குச் சொந்தமான இந்த 15 ஏக்கர் காணியில் தீவகத்துக்கான கடற்படையின் பிரதான முகாம் அமைக்கப்பட்டு காணி கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.*

*குறித்த காணியை சுவீகரிப்பதற்குரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், குறித்த 15 ஏக்கர் காணியின் உரிமையாளர்கள் தமது காணியை பெற்றுத் தருமாறு கோரி, யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.*

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

# கோட்டாபயவின் ஆணைக்குழு இலங்கையை காப்பாற்றாதாம்!

இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை ஆராயும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தற்போது அமைத்துள்ள ஆணைக்குழு நாட்டுக்கு எந்த விதத்திலும் கைகொடுக்கப்போவதில்லை. இது வெறுமனே கண்துடைப்பு நாடகம் என்பதை சர்வதேசம் நன்கு அறியும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இலங்கைக்கு சீனாவின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை ராஜபக்ஷ அரசு நிராகரித்தது. சீனாவை நம்பிக்கொண்டு அரசு எடுக்கும் முயற்சிகள் நாட்டை மிகப்பெரிய நெருக்கடிக்குள் தள்ளப்போகின்றது எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணையை ஏற்றுக்கொள்வதாக மஹிந்த ராஜபக்ஷ அரசு சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரமே தொடர்ச்சியாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

நல்லாட்சி அரசு புதிய தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கி இலங்கை இராணுவத்தைப் போர்க் குற்றங்களில் சிக்கவைக்கவில்லை.

போர்க்குற்றங்களில் சிக்கவிருந்த இராணுவத்தையும், அதற்குத் துணை நின்ற தலைவர்களையும் எமது அரசில் எடுத்த நடவடிக்கைகள் காரணமாகக் காப்பாற்றினோம்.

2015ஆம் ஆண்டு அமெரிக்கா கொண்டுவந்த புதிய தீர்மானத்தை நாம் நிராகரிக்காது இணை அனுசரணை வழங்கியதன் மூலமாகவே இலங்கைக்கான சர்வதேச ஒத்துழைப்புகள் கிடைக்கப்பெற்றன. தற்போதைய அரசு ஐ.நா. தீர்மானங்களிலிருந்து விலகிக்கொள்வதாக கூறியுள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகள் அதற்கான எதிர்ப்பை வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டன.

இந்த நிலைமை தொடருமாயின் இலங்கை தனித்து விடப்படுவதுடன், ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார தடைகளுக்கும் உள்ளாக நேரிடும் - என்றார்.

# கந்தகாடு நிலையத்தில் போதை அடங்கிய டெனிஸ்: கண்டறிவதற்கு விசேட விசாரணைக் குழு அமைப்பு!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

கந்தக்காடு கொரோனா சிகிச்சை நிலையத்தின் வளாகத்தில் டெனிஸ் பந்துக்குள் போதைப்பொருள்களை வைத்து வீசிய சந்தேகநபர்களை அடையாளம் காண்பதற்கான விசாரணைகள் விசேட விசாரணைக்குழுவினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

வெலிக்கந்த - கந்தக்காடு பகுதியில் அமைந்துள்ள கொரோனா சிகிச்சை நிலையத்தில் கடைமையில் ஈடுபட்டுள்ள சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினரால் சிகிச்சை நிலையத்தின் வளாகத்திலிருந்து இரு டெனிஸ் பந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அந்த பந்துகளை பரிசோதனை செய்து பார்த்தப்போது , அவற்றுக்குள் மறைத்துவைக்கப்ட்டிருந்த ஹெரோயின் , கஞ்சா மற்றும் புகையிலையை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட போதைப் பொருள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைப் பெற்றுவரும் நோயாளர்கள் யாருக்காவது வழங்கும் நோக்கத்திலேயே அந்த போதைப் பொருள்கள் அடங்கிய பந்து வீசப்பட்டிருக்கும் என்று சந்தேக எழுந்துள்ளதுடன் , இவ்வாறு இந்த பந்தை எறிந்தவர்கள் தொடர்பில் விவரங்கள் தெரியவந்தால் அவர்களை கைது செய்து கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைக்குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். - என்றார்.

# வவுனியாவில் மேலும் 13 தொற்றாளர்கள்! மொத்த எண்ணிக்கை 301 ஆக உயர்ந்தது

வவுனியாவில் 13 பேருக்கு நேற்றையதினம் கொரோனா தொற்றுஉறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் வவுனியாநகர வியாபார நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களிற்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் ஒருபகுதி முடிவுகள் நேற்று வெளியாகின.

அதனடிப்படையில் வவுனியாவின் நகரப்பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்களில் பணியாற்றும் தனிமைப்படுத்தப்பட்ட 13 பேருக்கு தொற்று இருக்கின்றமை உறுதிசெய்யப்பட்டது.

நேற்று அடையாளம் காணப்பட்ட நபர்களுடன் கடந்த ஒரு மாத காலப்பகுதியில் வவுனியாவில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 301ஆக அதிகரித்துள்ளது

# ஒரு வருடத்துக்கு தேர்தல் இல்லை!

## விஜயசேகர தெரிவிப்பு

நாட்டில் நிலவும் கொரோனா தொற்று நெருக்கடி காரணமாக ஒரு வருடத்துக்கு எந்தத் தேர்தலும் நடைபெறாது என இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தறை பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், கொரோனா தொற்றின் இரண்டாவது அலையை கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டுக்களை நிராகரித்தார்.

முதலாவது அலையை முடக்க கட்டுப்பாடுகள் மூலம் கட்டுப்படுத்த அரசாங்கத்தால் முடிந்தது எனக் குறிப்பிட்ட அவர், பொருளாதாரத்தையும் நாட்டையும் தொடர்ச்சியாக நிறுத்திவைக்க முடியாது என ஜனாதிபதி கருதுகிறார் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை 2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களால், சுற்றுலாத்துறையால் கிடைக்கும் சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை நாடு இழந்தது என்றும் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர சுட்டிக்காட்டினார்.

தாக்குதல்களுக்குப் பின்னர் நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாகக் குறைந்துவிட்டதாகவும் அன்றிலிருந்து அத்துறை மீளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு கடன் சுமையில் இருந்த போது இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது என்றும் இருப்பினும் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் வட்டி விகிதத்தைக் குறைக்கவும் தங்களால் முடிந்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

# பாணந்துறையில் ஒருவர் நேற்று சுட்டுப் படுகொலை

களுத்துறை மாவட்டத்தின் பாணந்துறை, பல்லேமுல்ல பிரதேசத்தில் நேற்று முற்பகல் இனந்தெரியாத குழுவொன்றின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந் துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இருவர், ஓட்டோவில் பயணித்தோரை நோக்கித்துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோவில் சென்ற ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாகப் பாணந்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ் கலாலயா பயிற்சியகம்
A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
வெளிநாடுகளுக்கு செல்ல இருக்கும் மங்கையரே!!
மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!!!
உங்களுக்கான 3 மாத கால பயன்மிகு பயிற்சிகள் 28.01.2021 தைப்பூசத்தன்று காலை 09.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
- கேக் ஐஸிங்
- கூந்தல் அலங்காரம்
- அழகுக்கலை (Makeup)
- Facial
- பல விதங்களில் சேலை அணியும் முறைகள்
- சிற்றுண்டிகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு உணவுகள் தயாரித்தல்.
- பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.
- இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்
- சனி – ஞாயிறு அல்லது கிழமை நாள் பிரிவில் இணையலாம்.
மேலும் விவரங்களுக்கு நேரில் வருகை தரவும்.
இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) அங்கீகரிக்கப்பட்டது.
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் போதனா வைத்தியசாலையின் பின் வீதி

தேவை
திருநெல்வேலியில் இயங்கும் தனியார் நிறுவனத்துக்கு அலுவலக பொறுப்பாளர் / கணக்காளர் தேவை. ஆங்கிலம் / கணினி அறிவு அவசியம்.
தொடர்புகளிக்கு 0760117002

கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை


| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1991.10.17 | பிறந்த திகதி - 1989.08.25 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - திருவோணம் | நட்சத்திரம் - ஆயிலயம் |
| செவ் - 8 இல் | சூ/செவ் - 5 இல் |
| பாவம் - 26 | பாவம் - 15 3/4 |
| கல்வி - Engineering | கல்வி - அவுஸ்ரேலியா Engineering |
| தொழில் - Engineer | தொழில் - அவுஸ்ரேலியா PR |
| எதிர்பார்ப்பு - கனடா வரவிரும்பும் பெண் | எதிர்பார்ப்பு - அவுஸ்ரேலியாவில் மணமகன்தேவை |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

Anna EXPRESS Courier Services

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம் |
| சங்கானை | பளை | மல்லாவி |
| கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார் |
| ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு |


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.01.2021 இல் வெளியிடப்பெற்றது.